Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 537 சுபகிருது வருடம், வைகாசி மாதம் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (07.06.2022) ஹிஜ்ரி - 1443, ஜுல்ஹஃதா - 06, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## உஷ்



21ஆவது திருத்தம் தொடர்பில் கடந்த வாரம் பிரதமர் அலுவலகத்தில் நடந்த சந்திப்பு ஒன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரன் எம்.பிக்கு பின்வரிசை ஆசனம் ஒதுக்கப்பட்டதாம். அவரை முன்வரிசையில் வந்து அமருமாறு தயாசிறி எம்.பி. கூறியபோதும் அதனை மென்மையாக புன்னகையுடன் மறுத்துவிட்டாராம் சுமந்திரன்.

சுமந்திரன் , சாணக்கியன் ஆகியோர் ரணிலை அரசியல் ரீதியாக விமர்சித்துவருவதால், ரணிலின் தரப்பில் இருப்போர் கடுப்படைந்து இவ்வாறு நடந்துகொண்டுள்ளதாக தகவல்.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



முழுநாட்டுக்குமே தெரிஞ்ச ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைதுசெய்யவே பொலிஸ் இவ்வளவு காலம் எடுக்குது... தெரியாத தீவிரவாதி ஒருத்தன் மறைஞ்சிருந்தா எப்படிப் பாருங்கோ இவங்கள் பிடிப்பாங்கள்...?

## பொலிஸ் வாகனங்களுக்கு எரிபொருள் வரையறை

இம்மாதம் முதலாம் திகதிமுதல் அமுலாகும் வகையில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அனைத்து பொலிஸ் வாகனங்களுக்கும் வழங்கப்படும் எரிபொருளின் அளவை 20 வீதம் குறைக்குமாறு...

02 பக்கம்

# எம்.பிக்களுக்கு 101 வீடுகளை அமைக்க 180 கோடி தேவை : அமைச்சரவைப் பத்திரத்தை நேற்று சமர்ப்பித்தார் பிரசன்ன!

யோ.தர்மராஜ்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வமாக பயன்படுத்துவதற்கு 101 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரமொன்றை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சமர்ப்பித்துள்ளார்.

இந்த வீடுகளுக்கான இடங்கள் பன்னிப்பிட்டியவிலுள்ள வியத்புர வீடமைப்புத் திட்டத்திலிருந்து ஒதுக்குவதற்கும் 101 வீடுகளுக்குத் தேவையான ஆயிரத்து 795 மில்லியன் ரூபாவை திறைசேரியிலிருந்து ஒதுக்குவதற்கும் அனுமதி கோரியே இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சமர்ப்பித்துள்ள அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,...

02 பக்கம்

## பொதுத்துறை ஊழியர்கள் வீட்டிலிருந்து பணியாற்றல்

### திட்டம் தயாராவதாக கூறும் அமைச்சர் தினேஷ்




பொதுத்துறை ஊழியர்களுக்காக வீட்டிலிருந்து பணிபுரியும் திட்டத்தை தயாரித்து வருவதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த வேலைத்திட்டம் தொடர்பில் தற்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதனை விரைவில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

# 21 நிறைவேற்றப்பட்டால் வெளியேறி விடுவேன்!





## ரணிலுடனான சந்திப்பில் சொன்னார் பெசில்; எம்.பிக்கள் குழுவுடன் நேரில் சென்று பேச்சு

யோ.தர்மராஜ்

21ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டால் தான் நாடாளுமன்ற பதவியிலிருந்து விலகி அரசியலிலிருந்து வெளியேறவுள்ளதாக முன்னாள் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் 'தமிழன்' நாளிதழிடம் நேற்றிரவு (06) தெரிவித்தார்.

21ஆவது அரசியலமைப்புத் திருத்தம் குறித்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க, நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, பெசில் ராஜபக்ஷ உள்ளிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களுக்கிடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

02 பக்கம்

## சமையல் எரிவாயு கப்பல் கொழும்பு துறைமுகத்தில்

2000 மெட்ரிக் தொன் எரிவாயு தாங்கிய கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன், நாடளாவிய ரீதியில் லிட்ரோ எரிவாயு கொள்கலன் விநியோகம் இன்று வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

02 பக்கம்

## மத்திய வங்கி ஆளுநரின் பதவிக்காலம் முடிகிறது

### நீடிக்க பிரதமரின் அனுமதி தேவை

மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் நந்தலால் வீரசிங்கவின் பதவிக்காலம் இம்மாதம் 30ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இதன்பின்னர் ஜனாதிபதி புதிய மத்திய வங்கி ஆளுநரை நியமிக்க வேண்டும் அல்லது தற்போதைய ஆளுநரின் பதவிக்காலத்தை நீடிக்க வேண்டும்.

மத்திய வங்கிக்கு புதிய ஆளுநரை நியமிப்பதற்கு நிதி அமைச்சரின் எழுத்துபூர்வ பரிந்துரையை ஜனாதிபதி பெற்றுக்கொள்ள வேண்டும், அதன்படி பிரதமர்....

02 பக்கம்




## கொழும்பிலிருந்து வெளியேறிய ரஷ்ய ஏரோப்ளோட் விமானம்

### இராஜதந்திர நெருக்கடி தணிந்தது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ரஷ்யாவின் ஏரோப்ளோட் விமானம் (SU289) நேற்று (06) மாலை மொஸ்கோ நோக்கி புறப்பட்டது.

02 பக்கம்



## அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு 2 வருட சிறைத்தண்டனை விதிப்பு

### வர்த்தகர் ஒருவரை மிரட்டி கப்பம் பெற்ற வழக்கில் கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்ப்பு

யோ.தர்மராஜ்

2015ஆம் ஆண்டு வர்த்தகர் ஒருவரை மிரட்டி 64 மில்லியன் ரூபா கப்பம் பெற்றதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கில் அவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு....

02 பக்கம்

## கந்தப்பளை காணி விவகாரம் குறித்து விளக்கம் கோரியுள்ளோம்!

### தவறு இருந்தால் கடும் நடவடிக்கை என்கிறார் செந்தில் தொண்டமான்

02 பக்கம்

## தேவையான அளவு பொருட்களை மட்டுமே பெற்றுக்கொள்ளுங்கள்


### மக்களிடம் வர்த்தக அமைச்சர் வேண்டுகோள்

யோ.தர்மராஜ்

நாட்டு மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை அவர்களின் தேவைக்கு ஏற்றளவில் பெற்றுக்கொள்ள முடியும்.

02 பக்கம்

## அடுத்த தேர்தலில் போட்டியிட மாட்டேன்!



### வெளிநாட்டு ஊடகத்திடம் கூறினார் கோட்டா

02 பக்கம்

## சப்புகஸ்கந்தவிலிருந்து டீசல் விநியோகம் ஆரம்பம்

சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து எரிபொருள் சந்தைக்கு விநியோகிக்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

மசகு எண்ணெய் பற்றாக்குறையால் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதைத் தொடர்ந்து சுத்திகரிப்பு நடவடிக்கைகளைத் தொடங்கியது.

சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 800 மெட்ரிக் தொன் டீசல்...

02 பக்கம்

# பணயக் கைதியின் நிலையில் புதிய பிரதமர் ஆட்சியின் கபடத்தனத்திற்கு இணங்கினால் விபரீதம்!

## புத்தளத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் எச்சரிக்கை



ஜனாதிபதி, இந்த இக்கட்டான காலச் சூழலைத் தாண்டுவதற்குப் புதிய பிரதமரை பணயக் கைதியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற பாங்கில் செயல்படுகின்ற அரசியல் நடவடிக்கையையே தற்பொழுது காண்கின்றோம் என தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், 19ஆவது சீர்திருத்தத்தின் உண்மையான உள்ளடக்கங்களை தங்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து இன்னும் ஆட்சியில் நீடித்து கொள்வதற்கான கபடத்தனமான ஆட்சிக்கு புதிய பிரதமரும் இணங்கிப்போவாராக இருந்தால் அவரது நிலைமையும் விபரீதமானதாக ஆகிவிடும் என்றும் எச்சரித்தார்.

நாகவில்லு(எருக்கலம்பிட்டி)ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்தியக் குழுவும், இளைஞர் காங்கிரஸும் இணைந்து புத்தளம் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய கட்சியின் விசேட ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அடிப்படைத் தேவைகள் பற்றிய விடயங்களில் கூட இன்னும் சரியான முடிவில்லாமல், நீண்ட வரிசைகளில் மக்கள் மணிக்கணக்கில் காத்திருக்கும் நிலைவரம் குறித்து மிகவும் கவலையாக இருக்கிறது. அதே நேரம் உணவு பஞ்சம் ஏற்படப் போகின்றது என்று அரசாங்கம் அடிக்கடி சொல்கின்றபோது மக்கள் பீதியடைந்து அநேகர் இந்த நாட்டை விட்டே வெளியேறுகின்ற நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இப்படி மக்களை பீதியில் வைத்துக் கொள்வதை விட்டுவிட்டு, இருக்கின்ற பதற்றத்தைத் தணிப்பதற்கும் அதேவேளை ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அரசாங்கம் முன்வர வேண்டும். வெளிநாடுகளில் இருந்து வருகின்ற உதவிகளை பெறுவதில் அரசாங்கம் காட்டுகின்ற ஆர்வத்தைப் போன்றே, இந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருகின்ற அவலங்களையும் கஷ்ட நிலைமைகளையும் தீர்த்து வைப்பதற்கும் முயற்சிக்க வேண்டும். நிலைமையை மிகப் பக்குவமாக கையாள்வதைவிடுத்து, என்னைப் பொறுத்தவரையில், ஆட்சிக்கு வந்துவிட்டதாகச் சொல்லி கொண்டிருக்கின்ற புதிய பிரதமர், ஆளுகின்ற பொதுஜன பெரமுன கட்சியின் பணயக் கைதியாக இருந்துகொண்டு எவ்வளவு தூரம் இதனை சாதித்து முடித்துவிட முடியும் என்பது பெரிய கேள்வியாகும்.

எதிர்க்கட்சியினராகிய நாங்கள் மிக அவதானமாக எங்களால் முடிந்தளவு நாட்டை காப்பாற்ற வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் விடயங்களை அணுகுகின்றோம். அதேவேளை, வெறும் சொந்த சுயலாபங்களுக்காக ராஜபக்ஷ குடும்பத்தினரை காப்பாற்ற எடுக்கப்படுகின்ற அரசியல் நடவடிக்கைகளைப்பற்றி மிகவும் அவதானமாக இருக்கின்றோம்.

நாட்டு மக்களின் ஒருமித்த கோரிக்கையான ராஜபக்ஷ குடும்பத்தினர் ஆட்சியில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு முதன்மை இடம் அளிக்கின்ற வகையில் செயற்பாடுகள் அமைய வேண்டும். குறைந்த பட்சக் காலக்கெடுவையாவது விதிக்கவேண்டும். எந்த காலக்கெடுவும் இல்லாமல் எந்த ஜனாதிபதி பதவியில் நீடிக்கின்றாரோ, அந்த ஜனாதிபதி சரியான கால அட்டவணை இல்லாமல் எப்படியாவது இந்த இக்கட்டான காலச்சூழலைத் தாண்டுவதற்கு புதிய பிரதமரை பணயக் கைதியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பாங்கில் செயல்படுகின்ற அரசியல் நடவடிக்கையையே தற்பொழுது காண்கின்றோம் - என்றார்.

### உஷ்...

***எவ்வாறாயினும், இந்த விடயம் பிரதமர் ரணிலின் காதுகளுக்கு சென்று அவர் அழைத்து விசாரித்ததில் கட்சித்தலைவர் என்றபடியால் சம்பந்தனுக்கு மட்டும் முன்வரிசை ஆசனம் ஒதுக்கப்பட்டதாகவும் அதனால் தான் சுமந்திரனுக்கு பின்வரிசை ஆசனம் கொடுக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது.***

***அப்படியானால், சம்பந்தனுக்கு பதில்தானே சுமந்திரன் கலந்துகொண்டார்? அவருக்கு ஏன் வழங்கப்படவில்லை?.***

### தேவையான அளவு...

தற்போதைய சூழ்நிலையில், தங்களுக்கு தேவையான தொகையை குறிப்பாக, நாங்கள் எப்போதும் பெற்றுக்கொள்ளும் தொகையை மாத்திரம் விலை கொடுத்து பெற்றுக்கொள்ளுங்கள் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அமைச்சகத்தில் நேற்று (06) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை அவர்களின் தேவைக்கு ஏற்றளவில் பெற்றுக்கொள்ள முடியும். தங்களுக்கு தேவைக்கு அதிகமாக அத்தியாவசியப் பொருட்களை சேகரித்தால், அது குறித்த வர்த்தக நிலையத்துக்கு அல்லது அந்த வர்த்தக நிலையமுள்ள பொதுவான நிலைமையையும் பாதிக்கும்.

எனவே, தற்போதைய சூழ்நிலையில், தங்களுக்கு தேவையான தொகையை குறிப்பாக, நாங்கள் எப்போதும் பெற்றுக்கொள்ளும் தொகையை மாத்திரம் விலை கொடுத்து பெற்றுக்கொள்ளுங்கள். அதேபோன்று, தங்களிடமிருக்கும் தொகையை தங்களுக்கு தேவையானளவில் மாத்திரம் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுப்பது சிறந்தது.

குறிப்பாக, சாதாரண நிலைமையின்போது, 3 – 4 வருடங்களுக்கு ஒருமுறை நவம்பர் மற்றும் டிசம்பர் காலப்பகுதிகளில் நாங்கள் அரிசியை இறக்குமதி செய்துள்ளோம். ஆனால், தற்போது நாங்கள் அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். எனவே, அடுத்த 6 -7 மாதங்களுக்கு எவ்விதத்திலும் அரிசி தட்டுப்பாடு ஏற்படாது.

இதேவேளை, எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், 7 -8 மாதங்களுக்கு முன்னரே அத்தியாவசியப் பொருட்கள் பட்டியலிலிருந்து எரிவாயுவை நீக்கிவிட்டதால், நுகர்வோர் அதிகார சபைக்கு தற்போது எரிபொருள் விலையில் நேரடியாக தலையிட முடியாது.

ஆனால், எந்தந்த காரணங்களுக்கு அமைய இந்த விலை அதிகரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து நுகர்வோர் அதிகார சபையினால் கேள்வி எழுப்ப முடியும். ஆகவே, உடனடியாக எரிவாயு நிறுவனங்களை அழைத்து, குறித்த விலையை குறைக்க முடியுமா, எந்தத் திட்டத்தின் கீழ் குறித்த விலை இருந்தது என்பதை விசாரணை செய்யுமாறு நுகர்வோர் அதிகார சபைக்கு நான் அறிவித்துள்ளேன் - என்றார்.

### அமைச்சர் பிரசன்ன...

ஒத்திவைக்கப்பட்ட கடுழிய சிறைத் தண்டனையும் தண்டப்பணமும் விதித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன தீர்ப்பளித்துள்ளார்.

அதன்படி, அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிற்கு 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ள நீதிமன்றம், அதனை 5 வருட ஒத்திவைக்கப்பட்ட தண்டனையாக அறிவித்து உத்தரவிட்டுள்ளது.

அதேபோன்று, குற்றவாளிக்கு 25 மில்லியன் தண்டப்பணம் விதித்துள்ளதுடன், அதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் வழங்கப்பட்டுள்ள சிறைத் தண்டனைக்கு மேலதிகமாக 9 மாதங்கள் சிறைத்தண்டனையும் விதிக்கப்படும் எனவும் கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட வர்த்தகருக்கு ஒரு மில்லியன் ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ள நீதிமன்றம், அதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் 3 மாத சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனவும் உத்தரவிட்டுள்ளது.

**இச் சம்பவத்துடன் தொடர்பு**

2015 ஏப்ரல் 6ஆம் திகதி முதல் ஜூன் 2ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கொலன்னாவை, மீதொட்டமுல்ல ஆகிய பிரதேசத்திலிருந்த காணி ஒன்றில் அத்துமீறி குடியேறியிருந்த ஒரு தரப்பினரை வெளியேற்றி அதனை கைப்பற்றிக்கொள்வதற்கு ஆதரவளித்த குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு மேல் நீதிமன்றில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அக்காலப்பகுதியில் மேல்மாகாண முதலமைச்சராக இருந்த பிரசன்ன ரணதுங்க, ஜெராட் மெண்டிஸ் என்ற வர்த்தகரை அச்சுறுத்தி 64 மில்லியன் ரூபா பணத்தை கப்பமாகக் கோரியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அக்காலப்பகுதியில் மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அவரது மனைவி மொரீன் ரணதுங்க மற்றும் நரேஷ் பாரிக் ஆகியோருக்கு எதிராக கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது அப்போதைய சட்டமா அதிபரினால் மேல்நீதிமன்றத்தில் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கமைய குறித்த வழக்கின் தீர்ப்பு நேற்று (06) மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்னவினால் அறிவிக்கப்பட்டபோது, வர்த்தகர் ஒருவரிடமிருந்து 64 மில்லியன் ரூபா கப்பம் பெற்ற குற்றச்சாட்டில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குற்றவாளி எனக் கூறி உத்தரவிட்டுள்ளார்.

எனினும், அமைச்சரின் மனைவி மொரீன் ரணதுங்க மற்றும் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மற்றுமொருவரையும் வழக்கிலிருந்து விடுதலை செய்ய மேல்நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

### கொழும்பிலிருந்து...

'80,000 தொன் எடையுள்ள MV XIN YAO HUA என்ற நீர்மூழ்கிக் கப்பல், மூன்று கப்பல்களுடன் கொழும்பு துறைமுகத்திற்கு வந்துள்ளது. இந்த கப்பல்கள் இலங்கையின் பொருளாதார மீட்புக்காகவும், ரஷ்யாவின் ஏரோப்ளோட் விமான சேவைக்கு சொந்தமான விமானமொன்று, இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு தடை விதித்து பிறப்பித்த உத்தரவை கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் இடைநிறுத்தியதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் நகர்த்தல் பத்திரமொன்றை முன்வைத்து விடுத்த வேண்டுகோளை கருத்திற்கொண்டு நீதிமன்றம் இந்த தடை உத்தரவினை இடைநிறுத்தியிருந்தது.

நீதிமன்ற உத்தரவின்பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஷ்ய ஏரோப்ளோட் விமானத்திற்கு எதிரான வழக்கை திறந்த நீதிமன்றத்தில் உடனடியாக விசாரணைக்கு அழைக்குமாறு சட்டமா அதிபர் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் நேற்றுக்காலை (6) நகர்த்தல் பத்திரம் செய்தார்.

விசேட சமர்ப்பணத்தை முன்வைப்பதற்காக இந்த வழக்கை திறந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு சட்டமா அதிபர் கோரினார்.

விமானத்தில் பயணித்த பயணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள், தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பாதிப்பு மற்றும் நீதிமன்ற தீர்ப்பின் பிரச்சினைக்குரிய சட்டப் பின்னணி ஆகியவற்றை மையப்படுத்தியே சட்டமா அதிபர் நகர்த்தல் பத்திரத்தை தாக்கல் செய்தார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ரஷ்யாவுக்குத் திரும்பும் விமானத்தை இடைநிறுத்தி கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை அடுத்து, ரஷ்ய தேசிய விமானச் சேவையின் ஏரோப்ளோட் விமானம் ஜூன் 02 ஆம் திகதி நண்பகல் முதல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வழமையாக ரஷ்யாவின் மொஸ்கோவில் இருந்து காலை 10.10 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையும் ரஷ்ய ஏரோப்ளோட் விமானம் SU288 மதியம், 12.50 மணிக்கு ரஷ்யாவின் மொஸ்கோவிற்கு திரும்பவும் புறப்படுவது வழக்கம். இந்நிலையில், ஏரோப்ளோட் ஏர்லைன்ஸ் நிறுவனம், இலங்கைக்கான வணிக விமானங்களை நிறுத்த நடவடிக்கை எடுத்தது.

மேலும், கொழும்புக்கான விமானங்களுக்கான டிக்கெட் விற்பனையை தற்காலிகமாக நிறுத்தவும் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

### அடுத்த தேர்தலில்...

"தோல்வியடைந்த ஜனாதிபதியாக என்னால் செல்ல முடியாது," என்று கொழும்பில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் வெளிநாட்டு ஊடகமொன்றுக்கான நேர்காணலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

பல மாதங்களாக வீதிப் போராட்டங்கள் தம்மை பதவி நீக்கம் செய்யுமாறு அழைப்பு விடுத்தபோதிலும், மீண்டும் தேர்தலில் நிற்கப் போவதில்லை. ஆனாலும், இலங்கையை அதன் மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளும் நிதிக் குழப்பத்தை சரிசெய்வதில் ஈடுபட்டுள்ளேன். எனக்கு ஐந்து வருடங்கள் ஆணை வழங்கப்பட்டுள்ளது. நான் மீண்டும் போட்டியிட மாட்டேன்" என்று குறிப்பிட்டுள்ளார் கோட்டாபய.

அவர் மேலும் கூறியதாவது,

"நாங்கள் நீண்ட நேரம் காத்திருந்தோம். (சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட) குறைந்தபட்சம், ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடம் முன்னதாக சென்றிருந்தால், இந்த நிலை வந்திருக்காது.

"நாங்கள் நிதி மற்றும் சட்ட ஆலோசகர்களை (கடன் மறுகட்டமைப்பிற்காக) நியமித்துள்ளோம். ஆனால், அது மூலதனச் சந்தைகளுக்கானது. நாம் தனித்தனியாக செல்ல வேண்டிய இருதரப்பு; எங்களின் முக்கிய கடன்கள் சீனா, ஜப்பான், இந்தியா மற்றும் பாரிஸ் கிளப்பில் இருந்து வந்தவை. "நான் இந்தியா மற்றும் சீனாவிடம் உதவி கேட்டுள்ளேன். தலைவர்களிடம் தனிப்பட்ட முறையில் பேசி அவர்களுக்கு கடிதம் எழுதினேன். பின்னர் கத்தார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற மத்திய கிழக்கு தலைவர்களுடன் தனிப்பட்ட முறையில் பேசினேன். மேலும், மசகு எண்ணெய் விநியோகத்திற்கான நீண்டகால ஒப்பந்தங்களுக்கு உதவ சவுதி மற்றும் ஓமானுடன் பேச விரும்புகிறேன்.

"மானிய முறை தொடர்ந்து செல்ல வேண்டும். அரச ஊழியர்களையோ அல்லது இராணுவத்தையோ குறைக்க முடியாது. ஆட்சேர்ப்பை குறைப்பதன் மூலம் அவற்றை குறைக்கலாம்" என்றார்.

ஜனாதிபதியின் இந்த நிறைவேற்று (அதிகாரங்கள்) என்ன? உங்களுக்கு ஜனாதிபதி பதவி இருந்தால் அவருக்கு முழு அதிகாரமும் இருக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்து. இல்லையேல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்துவிட்டு முழுமையான வெஸ்ட்மின்ஸ்டர் பாணி நாடாளுமன்றத்திற்கு செல்லவேண்டும் என்றார் ஜனாதிபதி.

### கந்தப்பளை காணி...

***நமது மலையக செய்தியாளர்***

நுவரெலியா கந்தப்பளையில் இடம்பெற்றுள்ளதாக சொல்லப்படும் காணி ஊழல் தொடர்பில் நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாகவும் அதில் உண்மைத்தன்மை இல்லாத பட்சத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (06) தெரிவித்தார்.

கந்தப்பளையில், நுவரெலிய பிரதேச சபைக்கு உரிமம் கோரப்பட்ட காணி தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் 'தமிழன் வார இதழ்' ஆதாரங்களுடன் தகவல் வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், ஊழலுடன் தொடர்புடையோர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஊழல் செய்வோருக்கு, கட்சி பாரபட்சமின்றி தண்டனை வழங்கும் என அவர் சுட்டிக்காட்டினார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எப்போதும் நேர்மையாக பயணிக்க விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கந்தப்பளையில் இடம்பெற்றதாக கூறப்படும் காணி ஊழல் தொடர்பில் பிரதேச சபையின் தலைவர் வேலு யோகராஜிடம் விளக்கம் கோரியுள்ளேன். அவரிடம் உள்ள ஆவணங்கள் அனைத்தையும் சமர்ப்பிக்க வேண்டும். நியாயமில்லாத பட்சத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இ.தொ.கா. கட்டுக்கோப்புடைய கட்சி. இதில் தனிப்பட்ட இலாபத்துக்காக யாரும் செயற்பட இடமளிக்க முடியாது என்றார் செந்தில்.

### 21 நிறைவேற்றப்பட்டால்...

இச்சந்திப்பில் பவித்ரா வன்னியாராச்சி, ரோஹித அபேகுணவர்தன உள்ளிட்ட 14 பேர் கலந்து கொண்டிருந்த நிலையில், 21ஆவது திருத்தம் குறித்து இரு தரப்புக்குமிடையிலான வாதப்பிரதிவாதங்களின் போதே பெசில் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்ததாக மேற்படி சிரேஷ்ட உறுப்பினர் தெரிவித்தார்.

21ஆவது திருத்தம் குறித்து விளக்கமளிப்பதற்கே குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது, நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, குறித்த திருத்தத்தை கொண்டுவருவதற்கான நோக்கம் குறித்து விளக்கமளித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் அரசியல் நெருக்கடி தலைதூக்கியுள்ளது. எனவே, பொருளாதார நெருக்கடி தீர்க்கப்படும் பட்சத்தில் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கும். மாறாக, தற்போது அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகாண முயற்சிப்பது பொருத்தமற்றது என மொட்டுக்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதாக தெரிவித்தார்.

குறிப்பாக, நாட்டில் உரப்பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ள விவசாயிகளுக்கும் மருந்து தட்டுப்பாடுகளுக்கு முகம் கொடுத்துள்ள நோயாளிகளுக்கும் எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடுகளுக்கு முகம் கொடுத்துள்ள மக்களுக்கும் 21ஆவது திருத்தத்தால் தீர்வு கிடைக்குமா என நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திசாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

அரசியலமைப்பு திருத்தங்கள் மூலம் அம்பாறை மக்களின் உரப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமாயின், அவ்வாறானதொரு விடயம் கொண்டுவரப்பட வேண்டும். மக்கள் கேட்பது அரசியலமைப்பு திருத்தங்களை அல்ல மாறாக வயிற்றுக்கு உணவும், உரமுமே அவர்களுக்கு தேவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பெசில் ராஜபக்ஷவுக்கு எதிராக சில உறுப்புரைகளும் 21ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட சிரேஷ்ட உறுப்பினர் தெரிவித்தார்.

பெசில் மொட்டுக்கட்சியினரை வழிநடத்துவதாகவும் குற்றம் சுமத்துகின்றனர். ஆனால், அவர் இதுவரை 21ஆவது திருத்தத்திற்கு எதிராக வாக்களிக்குமாறு யாரிடமும் கோரவில்லை என்றும் அவர் 'தமிழன்' செய்திகளிடம் தெரிவித்தார்.

ஆனால், 21ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுமாக இருந்தால் தான் பதவி விலகுவதாக பெசில் ராஜபக்ஷ குறித்த கூட்டத்தில் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்து பேசிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க, குறித்த திருத்தம் என்னால் கொண்டுவரப்படவில்லை. ஜனாதிபதியின் விருப்பத்துக்கு அமையவே கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, உங்களுடைய கருத்துகளை நான் ஜனாதிபதியிடம் தெரிவிக்கிறேன் என்று கூறினார் எனவும் அறியமுடிகின்றது.

இதேவேளை, 21ஆவது திருத்தத்தால் டொலர் சம்பாதிக்கவும் மக்களின் உரப்பிரச்சினை, பொருட்கள் தட்டுப்பாடு போன்றவற்றுக்கு எவ்விதத் தீர்வையும் வழங்க முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே 19, 20 மற்றும் 21ஆவது திருத்தம் குறித்து விளக்கமில்லாதபோது, மக்களுக்கு இவை குறித்து விளக்கமிருக்குமா, அவர்களுக்கு உண்ண உணவு இருக்கின்றதா என்பதே அவர்களுக்கான பிரச்சினையாக இருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

அடிமட்டத்தில் உணவுக்காகவும் அன்றாட வாழ்க்கை செலவுக்காகவும் போராடிக்கொண்டிருக்கும் மக்களுக்கு அரசியல் திருத்தங்களால் எவ்விதப் பயனுமில்லை என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். ஒருவேளை, பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் 21ஆவது திருத்தம் கொண்டுவரப்படுமாக இருந்தால் ஆளுந்தரப்பு இரண்டாக உடையும் என அந்த சிரேஷ்ட உறுப்பினர் 'தமிழன்' செய்திகளிடம் மேலும் தெரிவித்தார்.

### பொதுத்துறை ஊழியர்கள்...

பொதுத்துறை ஊழியர்களின் போக்குவரத்துச் செலவுகளைக் குறைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இருப்பினும், சுகாதாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கு இந்தத் திட்டம் பொருந்தாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

### சமையல் எரிவாயு...

எனினும், லாவ்ஸ் சமையல் எரிவாயு கொள்கலன் விலை நேற்றுமுன்தினம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 12.5 கிலோகிராம் நிறையுடைய லாவ்ஸ் சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்று 6,850 ரூபாவாகவும், 5 கிலோகிராம் 2,740 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லிட்ரோ சமையல் எரிவாயு விநியோகம் இன்று அல்லது நாளை ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### பொலிஸ் வாகனங்களுக்கு...

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பிரதேச கணக்காளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மின்சாரம் மற்றும் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துவதற்காக பொலிஸ் வாகனங்களுக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவை 15 வீதம் குறைக்குமாறு 11.04.2022 திகதியிட்ட சுற்றறிக்கையில் அனைத்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் பொலிஸ் மா அதிபர் முன்னர் அறிவித்திருந்தார்.

இம்மாதம் முதலாம் திகதி முதல் 20 வீதம் குறைக்குமாறு பொலிஸ் மா அதிபர் மீண்டும் பணிப்புரை விடுத்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு ஏற்ப பொலிஸாருக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு வரம்பு அதிகரிக்கப்படாததால், பொலிஸாருடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து வாகனங்களுக்கும் நிதி ஒதுக்கீடு மட்டுப்படுத்தப்பட வேண்டுமென பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மத்திய வங்கி...

ரணில் விக்ரமசிங்க நிதியமைச்சர் என்ற அந்தஸ்திலிருந்து பொருத்தமான ஒருவரை நியமிக்க வேண்டும்.

மத்திய வங்கியின் ஆளுநரின் பதவிக்காலம் ஆறு வருடங்கள் என்பதுடன், 2016ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட இந்திரஜித் குமாரசுவாமியின் பதவிக் காலத்தின் இறுதி மாதத்தை தற்போதைய ஆளுநர் கழித்துள்ளார்.

குமாரசுவாமி தனது பதவிக்காலம் முடிவடையாமல் இராஜினாமா செய்த பிறகு, டபிள்யூ.டி.லக்ஷ்மண் மற்றும் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் மத்திய வங்கியின் ஆளுநர்களாக எஞ்சியிருந்த காலப்பகுதியில் பணியாற்றியுள்ளனர்.

நந்தலால் வீரசிங்க, 2016 முதல் 2022 வரை மத்திய வங்கியின் ஆளுநராக தனது ஆறு வருட காலத்தின் கடைசி மாதத்தில் சேவையாற்றி வருகிறார்.

### சப்புகஸ்கந்தயிலிருந்து...

சந்தைக்கு விநியோகிக்கப்படும் நடவடிக்கை நேற்றுமுதல் ஆரம்பமாகியுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

முதற்கட்டமாக 450 மெட்ரிக் தொன் மாத்திரமே விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும். மீதமுள்ளவை தொழில்துறை நடவடிக்கைகளுக்கு மொத்த விநியோகமாக வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெற்றி நிச்சயம்**

**உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்பு கொண்டால் 100% வெற்றி நிச்சயம். நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, வியாபார மந்தம், கடன், முன்னேற்றத்தடை, எதிரித் தொல்லை, வழக்கு, கொடுத்த பணம் திரும்பி வர, கணவன் மனைவி பிரச்சினை, நீண்டகால நட்பின் பிரிவால் வேதனை, நன்றாக பழகி பயனடைந்து விட்டு விலகிச்சென்றுவிட்டவர், குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு நினைத்தது நினைத்தப்படி நடக்க உடனே என்னை தொடர்புகொள்ளுங்கள். உலகப்புகழ்பெற்ற மலையாள மாந்திரீக ஜாம்பவான் தத்துவஞானி மகரிஷி தேசபந்து கௌரவ கலாநிதி ஸ்ரீமத் சுவாமிஜி 071 5869631 www.facebook.com / srimath Suwamiji**

### எம்.பிக்களுக்கு 101...

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதிவெலயில் அமைந்துள்ள வீட்டுத்தொகுதியானது 1994ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டதாகும். 120 வீடுகளைக் கொண்டுள்ளதுடன், ஒரு வீடானது 1,100 சதுர அடிகளை கொண்டதாகும்.

மாதிவெலயில் வீடுகள் அமைந்துள்ள பகுதியை அபிவிருத்திகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபை பெற்றுக்கொண்டு, நகர அபிவிருத்தி அதிகார சபையின் வீட்டுத்திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வீடுகளை வழங்குமாறு ஜனாதிபதியினால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்த வீடுகளுக்காக வேறொரு இடத்தில் புதிய வீடுகளை பெற்றுக்கொடுப்பது தொடர்பாக 2021.06.23ஆம் திகதி சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற குழுக்கூட்டமொன்றில் யோசனை முன்வைக்கப்பட்டது.

அதன்படி, 2018ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பன்னிப்பிட்டியவில் ஆரம்பிக்கப்பட்ட 500 வீடுகளைக் கொண்ட வியத்புர வீட்டுத்திட்டத்தில் பி தொகுதியிலுள்ள 101 வீடுகளை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வமான வீடுகளாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு வீடானது 750, 950 மற்றும் ஆயிரத்து 50 சதுர அடியைக் கொண்டதாகும். ஒரு வீட்டின் பெறுமதி 14.2 – 19.8 மில்லியனாகும்.

இந்த வீட்டுத்திட்டத்தில் 200 வீடுகள் நடுத்தரவர்க்கத்தினருக்காக முன் விற்பனைக்கு அமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்காக, 1,267.07 மில்லியன் ரூபா நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், 50 வீடுகள் கடற்படையினருக்காக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக கடற்படையிடமிருந்து 334.07 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றுள்ளதுடன், மேலும் 328.14 மில்லியன் ரூபா கிடைக்கவுள்ளது. இந்த வீட்டுத்திட்டத்துக்காக நகர அதிகார சபையினால் ஒப்பந்தக்காரர்களுக்கு 9 ஆயிரத்து 720.74 மில்லியன் ரூபா செலுத்தப்படவுள்ளதுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கப்படவுள்ள 101 வீடுகளுக்காக 1,795.34 மில்லியன் ரூபா நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்படவேண்டியுள்ளது. இதேவேளை, 2022 மே 9ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட வன்முறை சம்பவத்தால் வீடுகள் இல்லாதுபோன, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக, வியத்புர வீட்டுத்திட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வீடுகளை தற்காலிகமாக வழங்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

வியத்புர வீட்டுத்திட்டத்தில் 101 வீடுகளுக்கு செலவாகும் 1,795.34 மில்லியன் ரூபாவை 2022ஆம் ஆண்டுக்குள் திறைசேரியால் வழங்கப்பட வேண்டும் என்பதோடு, அதில் 50 வீதமான 897.67 மில்லியன் ரூபாவை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்குவதற்காக திறைசேரியால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட வேண்டும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# கட்டுநாயக்க விமானநிலையத்தின் கட்டுமானப் பணிகள் தாமதமடைவது குறித்து ஜப்பான் அரசிடம் முறையிடுவோம்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா திட்டவட்டமாக தெரிவிப்பு



கட்டுநாயக்க விமான நிலையத்தின் புதிய பயணிகள் பாவனைக்காக அமைக்கப் பட்டுவருகின்ற பகுதியானது மிக மோசமான வகையில் தாமதமடைவது தொடர்பில் தன்னுடைய பாரிய அதிருப்தியை தெரிவிப்பதாக விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்று அங்கு நடைபெறுகின்ற நிர்மாணப் பணிகளை பார்வையிட்ட பின்பு அந்த நிர்மாணப் பணிகளை முன்னெடுக்கின்ற ஜப்பான் நிறுவனத்திடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்காக ஜப்பான் நிறுவனம் ஒன்றை ஜப்பான் அரசாங்கவே தெரிவு செய்தது.

எனவே, இந்த கட்டுமானப் பணிகள் தாமதமடைவது தொடர்பாக ஜப்பான் அரசாங்கத்திடமே முறையிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தமானது கடந்த 8 வருடங்களுக்கு முன்பாகவே கைச்சாத்திடப் பட்டுள்ளது. ஆனால், இன்று வரை குறிப்பிடக் கூடிய அளவில் இந்தப் பணிகளில் முன்னேற்றம் காணவில்லை.

இதன் மூலம் பயணிகளுக்கான ஒரு பகுதியும் விமான நிலைய கட்டுப்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாகவுமே கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்காக திட்டமிடப்பட்ட தொகையானது 113 பில்லியன் ரூபாவாகும். அதற்கான தொகையை ஜப்பான் நிறுவனமான ஜய்க்கா வழங்கியுள்ளது. இந்த கட்டுமானப் பணிகள் கடந்த 2019 மற்றும் 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால், தற்பொழுது இரண்டு வருடங்களை கடந்துள்ள நிலையில் இதன் பணிகள் மிகவும் மந்தகதியிலேயே நடைபெற்று வருகின்றன. அதே நேரத்தில் இரண்டாம் பகுதியானது சர்வதேச விமான நிலைய விதிமுறைகளுக்கு அமைவாக அமைப்பதற்கே திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், தற்பொழுது அது சர்வதேச நியமங்களுக்கு மாறாகவும் பாதுகாப்பு விதி முறைகளுக்கு மாறாகவும் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. பணிகளை பொறுப்பேற்ற நிறுவனத்தின் பொறுப்பே உரிய காலத்தில் பணிகளை நிறைவு செய்ய வேண்டியது. இந்த தாமதத்திற்கு எரிபொருள் தட்டுப்பாடு ஒரு விடயமாக அமைந்துள்ளது.

அதே நேரத்தில் மேலதிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ள கொந்தரத்துகாரர்கள் தொடர்பாகவும் பாரிய சந்தேகம் நிலவுகின்றது. குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர்கள் உரிய தகுதியை கொண்டிராதவர்கள் என்பது தொடர்பாகவும் சந்தேகம் நிலவுகின்றது.

எனவே இது தொடர்பாக உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு விமான நிலைய அதிகாரிகளுக்கும் பணிப்பாளர் சபைக்கும் பணிப்புரை விடுத்தார்.

மேலும், இந்த கட்டுமானப் பணிகளானது சிறந்த தரம் வாய்ந்த ஒரு சேவையை விமானப் பயணிகளுக்கு பெற்றுக் கொடுக்கும் முகமாகவே இந்த புதிய கட்டுமானப் பணிகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டது. எனவே இந்தப் பணிகளை விரைவாக நிறைவு செய்ய வேண்டியது கட்டாயமானதாக அமைந்துள்ளது.

இந்த கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ்.ருவன்சந்திர உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# பாடசாலைக்கு போக மாட்டோம் வீதியில் இறங்கிப் போராடுவோம்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மாணவர்கள் என அனைவரும் “பாடசாலைக்கு போகமாட்டோம்” என்ற கோஷத்தோடு வீதியில் இறங்கும் நிலை ஏற்படுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா புவனேஸ்வரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா புவனேஸ்வரன் மீண்டும் நேற்று அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், இன்று(நேற்று) பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், போக்குவரத்து சீரில்லை. மாணவரின் போசணைக்கு வழியில்லை, ஆசிரியர்களின் பயணத்திற்கு மார்க்கமில்லை. இதற்கு மேலதிகமாக இன்னும் பல கஷ்டங்கள். இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு பாடசாலைகளை நடத்தி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முறையாக முன்னெடுக்க இன்றைய காலத்திற்குப் பொருத்தமான இலகுவான பொறிமுறைகளை முன்வைத்தோம்.

ஆசிரியர்களை சுழற்சி முறையில் அழைத்தல். பாட நேரங்களை அதிகரித்தல், ஆரம்ப வகுப்புகளுக்கு சுழற்சி முறையில் நாட்களைத் தெரிவு செய்தல், மாணவர்களை கிரமமாகப் பாடசாலைக்கு வரவழைக்க மதியபோசனம் வழங்குதல், தூர இடங்களுக்கு கடமைக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு பயணச் செலவில் அரைவாசியை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளல் போன்றவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்தாவிட்டால் எல்லோரின் மனநிலையிலும் விரக்தி ஏற்பட்டு இளையோர் வீதியில் இறங்கியதுபோன்று அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என அனைவரும் “பாடசாலைக்கு போகமாட்டோம்” என்ற கோஷத்தோடு வீதியில் இறங்கும் நிலை ஏற்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றுள்ளது.

# சவாலான நேரத்தில் இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவிகளுக்கு வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் நன்றி

## இந்திய உயர்ஸ்தானிகர் ஸ்ரீ கோபால் பாக்லேவிடம் தெரிவிப்பு

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் ஸ்ரீகோபால் பாக்லே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை கடந்த 2ஆம் திகதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, உணவு, எரிபொருள், உரம் மற்றும் மருந்துப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் உட்பட இலங்கைக்குதற்போது வழங்கப்படும் உதவிகள் குறித்து உயர்ஸ் தானிகர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச் சருக்கு விளக்கமளித்தார்.

இருதரப்பு ஈடுபாடுகள் மற்றும் நாட்டின் தற்போதைய முன்னேற்றங்கள் தொடர்பான விடயங்கள் குறித்தும் அவர் கலந்துரை யாடினார்.

குறிப்பாக இலங்கைக்கு சவாலான நேரத்தில் இந்தியா வழங்கிய தாராளமான மற்றும் தொடர்ச்சியான உதவிகளுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் நன்றிகளைத் தெரிவித்தார்.





உணவு, எரிசக்தி பாதுகாப்பு, மருந்துப் பொருட்கள் வழங்குதல், கடன் மற்றும் எஸ்.டப்ளியூ.ஏ.பி. ஏற்பாடுகள் ஆகியவற்றின் மூலமான குறிப்பிடத்தக்க ஆதரவு போன்ற அனைத்து துறைகளிலும் நல்கப்பட்ட மகத்தான அளவிலான இந்திய உதவிகளை இந்த நெருக்கடியான நேரத்தில் இலங்கை அரசாங்கம் ஆழமாக பாராட்டுவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டார்.

பல்லாண்டுகளாக நெருங்கிய அண்டை நாடுகளாகத் திகழும் இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக உறவுகளின் முக்கிய முக்கியத்துவத்தை இரு தரப்பினரும் பாராட்டினர்.

# மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனியார் பஸ்களில் அதிக கட்டணம் அறவீடு

## நடவடிக்கை எடுக்கக்கோரி பயணிகள் கோரிக்கை

**(செ.தி.பெருமாள்)**

மத்திய மலைநாட்டில் மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் சேவையில் ஈடுபட்டுவரும் தனியார் பஸ் நடத்துனர்கள் பயணிகளிடம் அதிகளவில் பணம் அறவிடுவதாக புகார் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் அடிக்கடி ஏற்படும் எரிபொருள் விலை உயர்வால் அதிக பணம் அறவிடப்படுகின்றது. மேலும் பயணக் கட்டணங்கள் அடங்கிய விபரம் காட்சிப்படுத்தப்படுவதில்லை, பயணச்சீட்டும் வழங்கப்படுவதில்லை. இதனைக்கேட்டால் நடத்துனர் தூற்றுவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் மத்திய மாகாண தனியார் பஸ் போக்குவரத்து அதிகாரிகள் உடன் கவனம் செலுத்த வேண்டும். குருந்தூர சேவையில் ஈடுபட்டு வரும் தனியார் பஸ்கள் மற்றும் தோட்டப்புறங்களில் சேவையில் ஈடுபட்டுவரும் தனியார் பஸ்கள் இவ்வாறு அதிக கட்டணங்கள் அறிவிடுவதை தவிர்க்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இலங்கை - பாகிஸ்தான் நட்புறவை வலுப்படுத்த உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு









**(இக்பால் அலி)**

அகில இலங்கை வை.எம்.எம். ஏ.பேரவை, வை.டப்ள்யூ.எம்.ஏ. மற்றும் கொழும்பு டைம்ஸ் சமூக ஊடக வலையமைப்பு ஆகிய அமைப்புகளின் ஏற்பாட்டில் இலங்கை - பாகிஸ்தான் நட்புறவை வலுப்படுத்தும் வகையில் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் வைபவம் கொழும்பு தெமட்டகொடை வீதியில் அமைந்துள்ள வை.எம்.எம். ஏ.பேரவையின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

சஹீட்.எம். ரிஸ்மி, ரசூல்டீன், பவாஸா தஹா ஆகியோர்களது இணைத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாகிஸ்தான் நாட்டு உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் உமர் பாருக் புர்க்கி கலந்துகொண்டு வழங்கி வைத்தார். இதில் கொழும்பு நகரில் அமைந்துள்ள வறிய குடும்பத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

# ரஷ்யாவிற்கான தபால் சேவைகள் இடைநிறுத்தம்

ரஷ்யாவிற்கு தபால் பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை தபால்த் திணைக்களம் அறிவித் துள்ளது.

இலங்கையில் இருந்து ரஷ்யாவுக்கான வர்த்தக விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள காரணத்தினால், ரஷ்யாவிற்கான தபால்ப் பொருட்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், விமானப் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டவுடன் ரஷ்யாவுக்கான தபால் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.








ஹட்டன் டம்பர் கீழக்கரையில் அமைந்துள்ள பன்மூர் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறுவதை முன்னிட்டு நேற்று பால்குடபவனி இடம்பெற்றதை காணலாம். (படங்கள்: மனூர சுதத்செல்லஹேவா)

நைஜீரியாவில் உள்ள கத்தோலிக்க தேவாலயத்தில், வழிபாடு நடத்தியவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதில், 50 பேர் கொல்லப்பட்டு பலர் பலத்த காயமடைந்த செய்தி உலகையே உலுக்கியிருக்கிறது.

தென்மேற்கு நைஜீரியாவிலுள்ள புனித பிரான்சிஸ் கத்தோலிக்க தேவாலயத்தில், வழிபாடு நடத்தியவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதுடன், வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தும் மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தினர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகள். இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. தாக்குதல் நடத்திய நபர் தப்பியோடிவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

துப்பாக்கிக் கலாசாரம் அண்மைக்காலமாக உலக நாடுகளை ஆட்டுவித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், இந்த சம்பவத்தின் மூலம் இந்தக் கொலை கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி எப்போதுதான் வைக்கப்படும் என்ற ஆதங்கம் மக்களிடையே ஏற்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்காவில் நடந்த கொடூரம் உலகம் அறிந்தது. அமெரிக்காவில் பள்ளிக்கூடம், விளையாட்டு மைதானம், வணிக வளாகம், ரயில் நிலையம் உள்ளிட்ட பொது இடங்களில் எந்த நேரத்தில், யார் துப்பாக்கிச்சூடு நிகழ்த்துவார்கள் என்றே தெரியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. தற்காப்புக்காக தனி மனிதர்கள் துப்பாக்கி வைத்துக்கொள்வதை அனுமதிக்கும் அந்த நாட்டில் இப்படியெல்லாம் நடக்காவிட்டால்தான் ஆச்சரியம்.

குறிப்பிட்ட குற்றங்களைச் செய்தவர்கள், நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்கள், குற்றச் செயல்களுக்காகத் தேடப்படுபவர்கள், மனநல மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டவர்கள் போன்ற ஒரு சில பிரிவினரைத் தவிர, ஏனைய அமெரிக்க குடிமக்கள் தங்களுடைய சொந்த பாதுகாப்பிற்காக துப்பாக்கிகளை வைத்திருக்க அனுமதிக்கப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து வந்து அமெரிக்காவில் தங்கியிருக்கும் வேற்றுதேச குடிமக்களுக்கும் சில நிபந்தனைகளின் அடிப்படையில் இவ்வுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஆனால், வாழ்க்கையில் தங்களுக்கு ஏற்பட்ட தனிப்பட்ட தோல்விகளாலும், வருத்தங்களாலும் பாதிக்கப்படுகின்ற அமெரிக்கர்கள் சிலர், தங்களின் கோபத்தை வெளிப்படுத்தும் விதமாக பொது இடங்களில் அப்பாவிப் பொதுமக்களின் மீது திடீரென துப்பாக்கிச்சூடு நடத்துவதும், என்ன நடந்தது என்றே தெரியாமல் பலரும் உயிரிழப்பதும் தொடர்கிறது.

கடந்த வாரம் அமெரிக்காவின் டெக்ஸாஸ் நகரிலுள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் நுழைந்த இளைஞன் ஒருவன், தான் வைத்திருந்த துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டதில் 19 குழந்தைகளும், இரண்டு பெரியவர்களுமாக மொத்தம் 21 பேர் உயிரிழந்தனர். பலர் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். அமெரிக்க தேசத்தை மட்டுமின்றி இவ்வுலக நாடுகள் அனைத்தையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த படுபாதகச் செயலைச் செய்த இளைஞனின் வயதுவெறும் 18 மட்டுமே.

சால்வடார் ராமோஸ் என்ற அந்த இளைஞனுக்கு மூன்று வயதிருக்கும் பொழுதே அவனுடைய பெற்றோர் விவாகரத்து பெற்றுக்கொண்டு விட்டார்களாம். ஆரம்பத்தில் தன் தாயுடனேயே அவன் வசித்து வந்தாலும் உண்மையான தாயன்பு அவனுக்குக் கிடைக்கவில்லை. சொந்தத் தாயாரே பாசம் காட்டாமல் கொடுமைப்படுத்தியதால் பாட்டியால் வளர்க்கப்பட்டான்.

சிறுவயதில் ஏற்பட்ட பேச்சுக் குறைபாடு காரணமாக, தான் பயின்ற

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜுன் 07ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# நிறுத்தப்படவேண்டிய துப்பாக்கிக் கலாசாரம்!

பாடசாலையில் சக மாணவர்களால் கிண்டலுக்கும், கேலிக்கும் ஆளானவன் பாதியிலேயே படிப்பை கைவிட்டு விட்டான். உறவுகளாலும், நண்பர்களாலும் தான் அடைந்த ஏமாற்றங்களுக்கும், வருத்தங்களுக்கும் பழிவாங்கத் துடித்த அவ்விளைஞன், தனக்கு 18 வயது வரும் வரை காத்திருந்தான். சிறுகச் சிறுகத் தான் சேமித்து வைத்திருந்த பணத்தை எடுத்துக்கொண்டு துப்பாக்கி விற்கப்படும் கடைக்குச் சென்று தன் விருப்பப்படி ஒரு கைத்துப்பாக்கியை வாங்கிக்கொண்டான்.

தன்னுடைய துன்பங்களுக்காக இச்சமூகத்தை பழிவாங்க வேண்டும் என்று நினைத்தவன் முதலில் தன்னை வளர்த்து வந்த பாட்டியையே நன்றியில்லாமல் சுட்டுக் கொன்றான். பின்பு சுமார் 130 கிலோமீற்றர் தூரம் கார் ஒன்றில் இலக்கில்லாமல் பயணித்து விட்டு, கடைசியில் டெக்ஸாஸ் நகரத்து பாடசாலைக்குள் புகுந்து கண்மூடித்தனமாகச் சுட்டிருக்கிறான்.

அந்த இளைஞனின் துன்பங்களுக்கு சிறிதும் தொடர்பற்ற அப்பாவிக் குழந்தைகளும், பெரியவர்களுமாக 21 பேர் நிமிட நேரத்தில் உயிரிழந்துவிட்டனர். விடயமறிந்து விரைந்து வந்த பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் அந்த இளைஞனும் கொல்லப்பட்டுவிட்டான்.

அமெரிக்க ஜனாதிபதி இந்நிகழ்வினால் மனம் அதிர்ந்து அஞ்சலி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அமெரிக்காவின் தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டு, இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டிருக்கிறது.

அமெரிக்க சரித்திரத்தில் இத்தகைய துப்பாக்கிச்சூட்டு நிகழ்வுகள் ஒன்றும் புதிதல்ல. சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் கனெக்டிகட் நகரத்திலுள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் நிகழ்த்தப்பட்ட இத்தகைய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் இருபது இளம் பிஞ்சுகள் உட்பட 26 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். தற்போது டெக்ஸாஸில் 21 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

இவ்விரண்டு படுகொலைகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் சிறியதும் பெரியதுமாக சுமார் 900 துப்பாக்கிச்சூடுகள் அமெரிக்கப் பாடசாலைகளில் நடந்திருக்கின்றன. சில நிகழ்வுகள் குறைந்த எண்ணிக்கையிலான உயிரிழப்புகளையும், வேறு சில நிகழ்வுகள் உயிரிழப்புகள் ஏதுமின்றி, ஒரு சிலருக்குக் காயங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றன. பாடசாலைகள் தவிர்த்த இதர பொது இடங்களில் நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச்சூடுகள் தனிக்கணக்கு.

டெக்ஸாஸ் நிகழ்வுக்கு 10 நாட்கள் முன்பு, நியூயார்க் நகரத்தின் சுப்பர் மார்க்கெட் ஒன்றில் நடந்த துப்பாகிச்சூட்டில் பொதுமக்கள் 10 பேர் பலியாகியுள்ளனர் என்பதைக் கணக்கில் கொள்ளும் பொழுது, அமெரிக்காவில் வீட்டை விட்டு வெளியே செல்பவர் பத்திரமாக வீடு திரும்புவது நிச்சயமில்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது என்று தோன்றுகிறது.

இத்தகைய கண்மூடித்தனமான துப்பாகிச்சூடு நிகழ்த்தியவர்களுக்கும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படும் விரக்திக்கும், கோபத்துக்கும் வடிகாலாக கொலைகளை நிகழ்த்துவது அங்கே தொடர்கதையாகி வருகிறது.

டெக்ஸாஸ் படுகொலை நிகழ்ந்த சில நாட்கள் கழித்து நியூயார்க் நகர மைதானம் ஒன்றில் நடந்த குத்துச்சண்டையைப் பலரும் பார்த்துக் கொண்டிருந்த பொழுது மைதானத்தின் ஒருபுறம் சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது.


இதைக் கண்ட பலரும் யாரோ துப்பாக்கிச்சூடு நிகழ்த்துவதாக பயந்துகொண்டு ஓடியதில்10 பேர் காயமடைந்துள்ளனர். அந்த அளவுக்கு இத்தகைய எதிர்பாராத துப்பாக்கிச்சூடுகள் அமெரிக்க மக்களின் நிம்மதியைப் பறித்திருக்கின்றன.

அமெரிக்காவின் அண்டை நாடான கனடாவில் தனி மனிதர்களுக்கு துப்பாக்கி விற்பனை செய்வதைத் தடைசெய்யப் போவதாக அந்நாட்டுப் பிரதமர் அறிவித்துள்ளார். கனடா காட்டும் வழியில் அமெரிக்காவும் பயணிக்க வேண்டிய நேரம் நெருங்கிவிட்டதாகவே தோன்றுகின்றது.

இப்போது அமெரிக்காவைத் தாண்டி இதர நாடுகளிலும் துப்பாக்கிக் கலாசாரம் அதிகரித்து வருகிறது. நம் நாட்டில் கூட கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்று முன்தினம் ஞாயிறு இரவுவரை நால்வர் துப்பாக்கிக்கு பலியாகியுள்ளனர். போதைப்பொருள் கடத்தல் வழக்குகளில் அரச சாட்சியாளர்களாக மாறிய நால்வர் இவ்வாறு அடுத்தடுத்து துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகியிருப்பதன் மூலம் இலங்கையும் இதர நாடுகளைப் போல் துப்பாக்கிக் கொலை கலாசாரத்திற்குள் மெதுவாக சென்றுகொண்டிருப்பது தெளிவாகின்றது.

நாடொன்று எந்த வகையில் முன்னேறியிருந்தாலும், தனிமனிதனுக்கு உயிர்ப்பாதுகாப்பு இல்லையெனில் அந்த நாடு முன்னேறியதாக அர்த்தப்படாது. அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும், இதர நாடுகளுக்குமிடையில் இந்த விடயத்தில் வேறுபாடுகள் இருந்தாலும் உயிரைப் பறிக்கும் துப்பாக்கிக் கலாசாரம் ஒன்றே.

இதனைக் கட்டுப்படுத்தத் தவறினால் இன்னும் பல உயிர்களை இழக்க நேரிடலாம். துப்பாக்கியால் ஒருவரை சுட்டுக்கொலை செய்வதற்கு துணிச்சல் இருக்கவேண்டும் என்பதற்கு அப்பால் அந்தளவு மன அழுத்தம் இருக்க வேண்டும். அரசுகள், பாதுகாப்புத் துறையினர் இதனைக் கவனிக்க வேண்டும்.



## லேசர் கதிரைத் தாங்கும் வைரக் கண்ணாடி

விண்வெளி முதல், உயர் தொழில்நுட்ப தொழிற்சாலைகள் வரை பல இடங்களில் ஆற்றல் மிகு லேசர் கதிர்கள் பயன்படுகின்றன. மேலும், இன்றுள்ளதைவிட ஆற்றல் மிக்க லேசர் கதிர்களை விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர்.

ஆற்றல் மிக்க லேசர்களை குவியப்படுத்தும் கண்ணாடிகளும், பலம் வாய்ந்தவையாக இருக்க வேண்டும். எனவேதான், ஹார்வர்ட் பல்கலைக்கழக பொறியியலாளர்கள், மிகக் கடினமான பொருளான வைரத்தை வைத்து கண்ணாடிகளை உருவாக்கியுள்ளனர்.


பழைய லேசர் கருவிகளிலுள்ள கண்ணாடிகளில், சற்றே விரிசல் இருந்தாலும், லேசர் கதிர் பிரதிபலித்துச் செல்லாமல், கண்ணாடியின் ஊடாக மறுபுறம் பாயும் ஆபத்து இருக்கிறது. ஆனால், வைரக் கண்ணாடியில் அந்த சிக்கல் இல்லை என ஹார்வர்ட் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க கப்பற்படையில் 10 கிலோவோட் லேசர் பயன்படுத்தப்படுகிறது. இது இரும்பை வெட்டக்கூடிய திறன் கொண்டது. இதுபோன்ற லேசரை, 3க்கு 3 மி.மீ. பரப்புள்ள வைரக் கண்ணாடி சில்லு மீது விஞ்ஞானிகள் செலுத்தினர். இக்கதிரை, 98.9 சதவீத அளவுக்கு வைரக் கண்ணாடி பிரதிபலித்தது. இதை வழக்கமான கண்ணாடிகள் சரியாக பிரதிபலித்திருக்க முடியாது. தற்போது, இத்தொழில்நுட்பத்தை வர்த்தகமயமாக்க விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர்.

## நக்கல் நமசிவாயம்

நாடு போற போக்கப் பாத்தா பொலிஸுக்கு, மக்கள்தான் பாதுகாப்பு கொடுக்கோணும் போல என்னங்கோ...!





## காற்றிலிருந்து நீரை உறிஞ்சும் ஜெல்!

நீர்ப் பற்றாக்குறை உலகெங்கும் இருக்கிறது. இதைத் தீர்க்க, காற்றிலிருந்து நீரை எடுக்கும் பல தொழில்நுட்பங்கள் வந்தபடியே உள்ளன. அதில் அண்மையில் அமெரிக்காவின் டெக்ஸாஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள ஒரு நுட்பம், அதிக செலவு பிடிக்காதது.

கருணைக்கிழங்கு பிசின் மற்றும் தாவரங்களில் உள்ள செல்லுலோஸ் ஆகியவை கலந்த ஜெல்தான் அந்த புதிய பொருள். இந்த ஜெல்லில் உள்ள பிசின் காற்றிலிருந்து ஈரப்பதத்தை ஈர்க்கிறது. ஈர்த்த ஈரம் செல்லுலோஸின் வடிவமைப்பிலுள்ள இடைவெளியில் தங்குகிறது. பிறகு தேவைப்படும்போது பிடிபட்ட நீரை நாம் எடுத்துக்கொள்ளலாம்.

சும்மா இல்லை. ஒரு கிலோ ஜெல், காற்றிலுள்ள ஈரப்பதத்தைப் பொறுத்து, 6 லிற்றர் முதல், 13 லிற்றர் வரை நீரை உறிஞ்சித் தருகிறது. இந்த ஜெல்லைத் தயாரிப்பதும் எளிது. எனவே, நீர்ப் பற்றாக்குறையுள்ள இடங்களுக்கு சீக்கிரமே இந்தத் தொழில்நுட்பம் எட்டும் என எதிர்பார்க்கலாம்.

## விதைகளைத் தூய்மையாக்கும் எலெக்ட்ரோன்கள்

கிடங்கிலிருக்கும்போதே விதைகளின் மேல் பூஞ்சைகள் மற்றும் வைரஸ்கள் குடியேறிவிடுகின்றன. இதனால், விளைச்சல் குறையக்கூடாது என்று, விவசாயிகள் பயிரிடுவதற்கு முன் விதைகளுக்கு கிருமிக் கொல்லிகளைத் தெளிப்பர்.

இக்கிருமிக் கொல்லிகள் பயிர்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் கேடு விளைவிப்பவை. எனவேதான் ஜேர்மனியிலுள்ள பிரான்ஹோபர் இன்ஸ்டிடியூட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள், விதைகள் மீது எலெட்ரோன்களைப் பாய்ச்சும் முறையை உருவாக்கியுள்ளனர். இதனால் விதைத்தோல் மீதுள்ள சகல ஒட்டுண்ணிகளும் செயலற்றுப்போகின்றன. ஆனால், தோலுக்குள்ளே உள்ள விதையின் மற்ற எதுவும் பாதிக்கப்படுவதில்லை.

ஜேர்மனியிலுள்ள விவசாயத் தொழில் அமைப்பான இ - விட்டா (E - Vita) மூலம் உருவாக்கப்பட்ட எலெக்ட்ரோன் விதை பதப்படுத்தும் இயந்திரம், ஒரு லொறி கொள்கலன்அளவுக்கே உள்ளது. எனவே, இதை விவசாயிகளின் விதைக் கிடங்கிற்கே கொண்டுபோய் பதப்படுத்தலாம். ஒரு மணிநேரத்திற்கு 18 தொன் விதைகளைப் பதப்படுத்தலாம். அதே நேரத்தில் விதை மீது ஊட்டச் சத்துகளையும் தெளிக்க முடியும்.



## இன்றைய நாளில்...

- 1692 – ஜமைக்காவில் மூன்றே நிமிடங்கள் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 1,600 பேர் வரையில் உயிரிழந்தனர். 3,000 பேர் வரையில் காயமடைந்தனர்.
- 1832 – கனடாவில் கியூபெக்கில் அயர்லாந்துக் குடியேறிகளால் கொண்டுவரப்பட்ட ஆசிய வாந்திபேதி நோய் காரணமாக 6,000 பேர் வரையில் உயிரிழந்தனர்.
- 2000 – கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் அமைச்சர் சி.வி. குணரத்ன மற்றும் தெஹிவளை மாநகர உதவி மேயர் ஆகியோர் கொல்லப்பட்டனர்.
- 2006 – மட்டக்களப்பு மாவட்டத்தில் நெடுங்கல் கிராமத்தில் இடம்பெற்ற கண்ணிவெடியில் சிக்கி 6 மாதக் குழந்தை உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007 – கொழும்பு விடுதிகளிலிருந்து தமிழர்கள் கட்டாயமாக வெளியேற்றப் பட்டனர்.

## தார் போட உதவும் பழைய ரயர்



காய்ந்து, விரிந்து பழுதாகின்றன. இதனைத் தடுக்க, வீணாகும் இறப்பர் ரயர்களைப் பயன்படுத்தலாம் என அவுஸ்திரேலியாவின் ஆர்.எம்.ஐ.டி. விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

வழக்கமான தார் சாலைகளின் மீது, 22 சதவீத அடர்த்தியுள்ள இறப்பர் ரயர் துகள்களை அரைத்து மேல் படலமாகப் போட்டு அவுஸ்திரேலிய ஆராய்ச்சியாளர்கள் சோதித்தனர். அத்தகைய படலத்தின் மீது அடர்த்தியான புற ஊதாக் கதிர்களை ஒரு மாதத்திற்குப் பாய்ச்சினர்.

இதன்மூலம் ஓராண்டுக்கு சூரிய ஒளியில் நேரடியாகக் காய்ந்தது போன்ற தாக்கத்தை அவர்கள் ஏற்படுத்தினர். இதையடுத்து பரிசோதித்தபோது, தார் - ரயர் இறப்பர் கலவைச் சாலைக்கு இரண்டு மடங்கு ஆயுள் இருக்கும் என்று கணித்தனர். அதேபோல சாலையில் வாகனங்கள் செல்வதற்கும் இந்தக் கலவைச் சாலை ஏற்றதாக இருக்கும் என்றும் தெரியவந்தது.

## வீட்டு வேலை செய்யும் ரொபோக்கள்!



வீட்டுத் தரை, தொழிற்சாலைத் தளம் என்று சுத்திகரிப்பதற்கு ரொபோக்களை பயன்படுத்துவதில் முன்னோடி டைசன் நிறுவனமாகும். இது விரைவில், வீட்டு வேலைகளைச் செய்யும் ரொபோக்களை சந்தைக்குக் கொண்டுவரவிருக்கிறது.

அண்மையில் டைசன் வெளியிட்டுள்ள காணொளியில், ஒரு ரொபோ, தரையில் கிடக்கும் பொம்மைகளை தன் கை விரல்களால் எடுக்கிறது. பாத்திரங்களை உலர்த்தி அடுக்குகிறது. இருக்கை மீதுள்ள தூசியை "வெக்கியும் கிளீன்" செய்வதுபோல உறிஞ்சுகிறது.

ரொபோவியலை கடந்த 20 ஆண்டுகளாக டைசன் நிறுவனம் ஆராய்ந்து வருகிறது. இதனால் அது தரை துடைக்கும் வட்டவடிவ ரொபோவோடு நிற்கவில்லை. அடுத்து, வீட்டுக்குள் நடமாடி, கைநீட்டி, வேலைகளைச் செய்யும் அசல் ரொபோக்களை அந்நிறுவனம் பரிசோதித்து வருகிறது. டைசன் நிறுவனம், 2000 இல் தொடங்கி தற்போது வரை 250 ரொபோ வல்லுநர்களை தனது சிங்கப்பூர் மற்றும் பிரிட்டன் மையங்களில் பணிக்கு சேர்த்துள்ளது. விரைவில் ரொபோ துறையின் மேலும் 750 மிகச் சிறந்த வல்லுநர்களை வேலைக்கு அமர்த்தவுள்ளது.

இதன்மூலம், வருங்கால வீட்டு ரொபோக்கள் மற்றும் தனி நபர் உதவி ரொபோக்கள் உற்பத்தியில் சந்தையில் முன்னணி இடம் வகிக்க டைசன் நிறுவனம் திட்டமிடுகிறது.

# நாடளாவிய ரீதியில் விவசாய கிராமங்களை உருவாக்க அவதானம்

## கிராம உத்தியோகத்தர், உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக செயற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை



நாட்டில் தட்டுப்பாடு நிலவும் உணவுப் பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்காக வீட்டுத் தோட்டச் செய்கையை மேற்கொள்ளும் ஆயிரக்கணக்கான கிராமங்களை உருவாக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக இது நடைமுறைப்படுத்தப் படுமென்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

தற்போதைய சந்தர்ப்பத்தில் உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். கிராம உத்தியோகத்தர்கள், விவசாய அதிகாரிகள், பொருளாதார அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளும் இந்த வேலைத்திட்டத்தில் பங்கேற்க வேண்டும்.

விவசாயிகளுக்கு உரம் கிடைப்பதைத் தடுக்கும் வகையில் சிலர் செயற்படுவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர குற்றஞ்சாட்டியுள்ளார். பெரும்போக பயிர்ச் செய்கைக்குத் தேவையான உரத்தைக் கொள்வனவு செய்வதற்கு 110 மில்லியன் டொலர்கள் தேவை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# இன்று கூடுகிறது நாடாளுமன்றம்; பிரதமர் ரணில் சபையில் விசேட உரை

(நமது நிருபர்)

நாடாளுமன்றம் இன்று முதல் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை தொடர்ச்சியாக நான்கு நாட்கள் கூடவுள்ளது.

இன்று 07ஆம் திகதி முற்பகல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட 2022.04.09ஆம் திகதிய 2274/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி மற்றும் கடன் எல்லையை ஒரு ட்ரில்லியன் ரூபாவினால் உயர்த்துவதற்கு உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானம் என்பன விவாதம் இன்றி நிறைவேற்றப்படவுள்ளன.

அதன் பின்னர் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் விசேட அறிவிப்பொன்று முன்வைக்கப்படவிருப்பதுடன், அது குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் பி.ப 5.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை மின்சாரம் திருத்தச்சட்டமூலம் (இரண்டாவது வாசிப்பு) மற்றும் பெற்றோலிய



வளங்கள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் என்பன நாளை மறுதினம் பி.ப 4.30 மணி வரை விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளன.

அதன் பின்னர் பி.ப 4.30 மணி முதல் 4.50 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பி.ப 4.50 மணி முதல் பி.ப 5.30 மணி வரை ஆளுங்கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின்போதான விவாதம் நடைபெறும். அதேநேரம்,மே 09ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தின்போது படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள தொடர்பான அனுதாபப் பிரேரணையை ஜூன் 10ஆம் திகதி மு.ப. 10 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நாடாளுமன்ற அமர்வு வாரத்தில் ஒவ்வொரு நாளும் நாடாளுமன்றம் மு.ப. 10.00 மணிக்குக் கூடவிருப்பதுடன், ஜூன் 10ஆம் திகதி தவிர ஏனைய நாட்களில் மு.ப 10.00 மணி முதல் மு.ப 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு), அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) மற்றும் பொது மனுக்கள் பற்றிய குழு போன்ற குழுக்களால் மீளாய்வுகளை மேற்கொள்ளும்போது நாடாளுமன்றத்தில் அவற்றை பலப்பலப்படுத்துவதற்காக சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன கடந்தவாரம் இடம்பெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய கூட்டத்தில் திருத்தங்களை முன்வைத்திருந்தார். இது தொடர்பில் மேலும் கலந்துரையாடுவதற்கு இன்று பி.ப 2.30 மணிக்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் விசேட கூட்டம் இடம்பெறவுள்ளது.

# பால்மா திருடியவர் மல்வானையில் கைது

மல்வானை, வல்கம பகுதி வர்த்தக நிலையம் ஒன்றில் பால்மா பைக்கற்று ஒன்றைத் திருடிய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொருட்களை வாங்கும் வகையில், வர்த்தக நிலையத்துக்கு வந்து இறாக்கையில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த 450 கிராம் நிறையுடைய பால்மா பைக்கற்றை எடுத்துள்ளார். அதன்பின்னர் அதனை சட்டைக்குள் மறைத்துள்ளார்.

இந்த விடயம் அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கெமராவில் பதிவாகியுள்ளது.

இது தொடர்பில் உரிமையாளரால் பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ஹொரணை பகுதியை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பியகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜந்த புஷ்பகுமார தலைமையில் விராரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## நோர்வூட் சென்.ஜோன்டிலரி தமிழ் வித்தியாலய 11ஆம் வகுப்பறைக்கு தீ வைக்கப்பட்ட சம்பவம்

# பாடசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்







(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட நோர்வூட் சென்.ஜோன்டிலரி தமிழ் வித்தியாலயத்தின் 11ஆம் வகுப்பறைக்கு தீ வைத்தமைக்கு, பாடசாலை அதிபர் உள்ளிட்ட நிர்வாகத்தினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆசிரியர்கள் நேற்று (06) பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்காக மூடப்பட்ட சகல அரசாங்க பாடசாலைகளினதும் இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமான நிலையில், இந்த பணிப் பகிஷ்கரிப்பும் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மே மாதம் 26ஆம் திகதி இரவு குறித்த பாடசாலையின் 11ஆம் வகுப்பறைக்குள் நுழைந்த சிலர், மதுபானம் அருந்திவிட்டு வகுப்பறைக்கு தீ வைத்துள்ளனர்.

அவ்வாறு தீ வைத்து எரிக்கப்பட்ட அந்த அலுமாரியில் இருந்த மாணவர்களின் தனிப்பட்ட தரவுகள் பல தீயில் கருகியுள்ளதுடன் பாடசாலையின் யன்னல் கண்ணாடிகளும் உடைத்து நொருக்கப்பட்டுள்ளன.

எனினும், இது தொடர்பில் பாடசாலை அதிபர் உள்ளிட்ட நிர்வாகத்தினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே ஆசிரியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.



இதனையடுத்து, நோர்வூட் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் குறித்த பாடசாலையின் 11ஆம் வகுப்பறை தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், அதிபரால் நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பில், முறையிடுவதற்கு ஹட்டன் வலயக் கல்விப் பணிமனையின் பணிப்பாளர் ஆர்.சத்தியேந்திராவை தொடர்பு கொள்ள முயற்சித்தபோதும் அது பயனளிக்கவில்லை.

# தம்புள்ளையில் மரக்கறி விலை நேற்று சடுதியாக அதிகரிப்பு

## வியாபாரிகள், நுகர்வோரின் வருகை 80வீதம் வீழ்ச்சி

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறி வகைகளின் விலைகள் நேற்று (06) சடுதியாக அதிகரித்ததுடன் வியாபாரிகள் மற்றும் நுகர்வோரின் வருகையில் 80வீத வீழ்ச்சி காணப்பட்டது.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாகவே இந்நிலை ஏற்பட்டதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் அனைத்து வகையான மரக்கறிகளின் விலைகளும் அதிகரித்துள்ளன.

தக்காளி, போஞ்சு, கத்தரிக்காய் ஆகியன கிலோ ஒன்று 600, 550, 300 ஆகிய மொத்த விற்பனை விலைக்கு விற்கப்பட்டுள்ளன.



உரம் இல்லாததால் விளைச்சலில் விவசாயிகள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளமையும் இந்த நிலைமைக்கு காரணம் என வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 06.06.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 142 3541 | 153 7533 |
| கனேடியன் டொலர் | 17 5 62 | 180 7585 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42 22 | 44 2048 |
| யூரோ | 270 7413 | 281 5777 |
| ஜப்பான் யென் | 1 6 74 | 1 7051 |
| சிங்கப்பூர் டொலர் | 146 766 | 155 80 1 |
| ஸ்ரேலிங் பவுன் | 331 05 2 | 346 5110 |
| சுவிஸ் பிரான்ங் | 256 6 5 | 270 5201 |
| ஐ.அ.டொலர் | 244 1830 | 254 155 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 844 5 36 |
| குவைட் | குவைட் தினார் | 0,066 0733 |
| ஓமான் | ஓமான் றியால் | 824 6133 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 2662 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 424 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 756 |

# தங்காலையில் மூவர் மீது துப்பாக்கிச் சூடு; சந்தேக நபர்களின் மோட்டார் சைக்கிள் மீட்பு

தங்காலையில் கெப் ரக வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு தப்பிச்சென்ற இருவர் பயணித்த மோட்டார் சைக்கிளை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

தங்காலை மொட்டகெட்டியார, தேதுவல பகுதியில் நேற்று முன்தினம் இரவு கெப் ரக வாகனத்தின் மீது அடையாளந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதில் மூவர் காயங்களுக்குள்ளாகி தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் வாகனத்தின் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நபர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனையே இந்த துப்பாக்கிப் பிரயோகத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் 37 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

தங்காலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ஹோமாகமவில் சடலம் மீட்பு

ஹோமாகம பிரதான பஸ் தரிப்பிடத்துக்கு அருகிலிருந்து மர்மமான முறையில் உயிரிழந்த நபர் ஒருவரின் சடலம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் (05) மீட்கப்பட்டுள்ளது.

பஸ்தரிப்பிடத்துக்கு அருகில் சுமார் 08 அடி ஆழமான வாய்க்காலிலிருந்தே சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.


இரண்டு நாட்களுக்கு முன்னர் இந்த நபர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.


சுமார் 50 வயது மதிக்கத்தக்க நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் நுகேகொட குற்றத்தடுப்புப் பிரிவினர் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேலும், ஹோமாகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துசித்த விக்ரமசிங்க தலைமையிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# ஆலயத்தை உடைத்து நகை, உண்டியல் கொள்ளை

## ஹப்புத்தளையில் சம்பவம்





ஹப்புத்தளையிலிருந்து, தம்பேத்தன்ன செல்லும் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ குறிஞ்சி முத்துமாரியம்மன் ஆலயத்தை உடைத்து நகை மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

பூஜை செய்வதற்காக நேற்று அதிகாலை, ஆலயத்துக்குவந்த பூசகர், ஆலய கதவு உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்து ஊர் மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து, ஊர் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஹப்புத்தளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

ஆலயத்தில் உள்ள இரண்டு உண்டியல்களும் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

அம்மனுக்கு அணிவிக்கப் பட்டிருந்த தங்க நகையும் களவாடப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில், ஹப்புத்தளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மண்சரிவு ஆபத்தை எதிர்நோக்கியுள்ள மக்களை அதே இடத்தில் தங்குமாறு அதிகாரிகள் பணிப்பு

## தொடர்கிறது வெவல்கெட்டிய தோட்ட மக்களின் அவலநிலை ஒருவாரமாக சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்கவைப்பு

(பலாங்கொடை நிருபர்)

மண்சரிவு ஆபத்தை எதிர்நோக்கி தற்காலிகமாக சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்கியுள்ள வெவல்கெட்டிய மக்களை மண்சரிவு ஏற்பட்ட இடங்களில் மண்கொண்டு நிரப்பி ரப்பர் சீட்டால் மூடி தத்தமது வீடுகளில் சென்று வசிக்குமாறு தெரிவித்த இரத்தினபுரி மாவட்ட தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையில் நேற்று(06) அமளிதுமளி ஏற்பட்டது.

ஹப்புகஸ்தென்ன வெவல்கெட்டிய கீழ்ப்பிரிவு தோட்டத்தில் மண்சரிவால் பாதிக்கப்பட்டு தற்காலிகமாக சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை பார்வையிட நேற்று(06) இரத்தினபுரி மாவட்ட தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன அதிகாரி ஒருவரும் கிராம உத்தியோகத்தரும் வருகை தந்திருந்தனர். அவ்வாறு வருகை தந்த அதிகாரிகள் அப்பகுதியை பார்வையிட்ட பிறகு பாரிய எந்தவொரு ஆபத்தும் இல்லை என தெரிவித்து மண்சரிவு ஏற்பட்டுள்ள இடங்களை மண் இட்டு நிரப்பி ரப்பர் சீட் கொண்டு மூடி, தத்தமது வீடுகளுக்கு சென்று வசிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இதன்போது பாதிக்கப்பட்டவர்கள் அவ்வாறு சென்று வசிக்க முடியாதென வருகைதந்திருந்த அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளனர். இதன்போதே அங்கு அமளிதுமளி ஏற்பட்டது.

பின்னர், ஆராய்ச்சி முடிவின் பின்னர் வரும் பதிலைகொண்டு நீங்கள் ஏதாவது ஓர் முடிவை எடுங்கள் அதுவரையிலும் தற்காலிகமாக சிறுவர் பராமரிப்பு நிலையத்திலேயே தங்கியிருங்கள் என்று அதிகாரிகள் தெரிவித்துவிட்டு சென்றதாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த மே மாதம் 31ஆம் திகதி ஏற்பட்ட மண்சரிவினால் ஒன்பது குடும்பங்களில் உள்ள 42 பேர் கடந்த ஒருவாரமாக தற்காலிகமாக தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்த 12பேர் கைது

(க.கிஷாந்தன்)

நாவலப்பிட்டி நகரில் மிக நீண்டகாலமாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த 12பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவலப்பிட்டி பொலிஸார், கம்பளை பொலிஸார் மற்றும் கம்பளை போதை ஒழிப்புப்பிரிவு அதிகாரிகள் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையிலேயே குறித்த 12பேரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இதில் பிரதான சந்தேகநபர் ஒருவரும் ஏனைய 11பேரும் போதை விற்பனை பிரதிநிதிகள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை கைது செய்த போது, அவர்களிடமிருந்து 2,880 மில்லிகிராம் ஹெரோயின், 560 மில்லிகிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 29 - 45 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்பதுடன், அவர்கள் நாவலப்பிட்டி, ஓவிட்ட, ஆகரஓயா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், சந்தேநபர்கள் நேற்று முன்தினம் (05) நாவலப்பிட்டி பதில் நீதவான் சுனெத்ரா கொட்டவலகெதர முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.




சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களால் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்தினம்(05) பலாங்கொடை நகரில் முன்னெடுக்கப்பட்டது. நாட்டின் பொருளாதாரப் பின்னடைவு மற்றும் இதனால் பொதுமக்கள் அனுபவித்துவரும் இன்னல்களுக்கு தீர்வு காணப்படல் வேண்டும் எனவும் இதன்போது பல்கலைக்கழக மாணவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. (ஏ.ஏ.எம்.பாயிஸ்)

# தேயிலைத் தொழிற்சாலையின் கழிவுநீரால் நீர்நிலைவாழ் உயிரினங்கள் அழியும் அபாயம்

## உரிய தரப்பினர் கவனம் செலுத்தக் கோரிக்கை





(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தேயிலைத் தொழிற்சாலை ஒன்றிலிருந்து வரும் கழிவுநீர் ஓடைகள் வழியாக மவுசாக்கலை நீர்த்தேக்கத்தை வந்தடைகிறது. இதனால் நீர்நிலைகளில் உள்ள மீன்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் அழிவடையும் அபாயமும் தோன்றியுள்ளதாக நீர்த்தேக்கங்களில் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில், கடந்த சில மாதங்களாக நீர்த்தேக்கங்களை அண்டிய பகுதியில் உள்ள தேயிலைத் தொழிற்சாலையில் இருந்து மாலை வேளையில் கழிவுநீரை தொழிற்சாலைக்கு அருகில் அமைந்துள்ள மவுசாக்கலை நீர்த்தேக்கத்துக்கு நீரை வழங்கும் ஓடையில் திருப்பி விட்டுள்ளதால் கழிவுநீர் நீர்த்தேக்கத்தை வந்தடைகிறது.

இவ்வாறு தொடர்ந்து கழிவு நீர் ஓடைகள் வழியாக வந்தால் நீர்த்தேக்கத்தில் உள்ள நீர் வாழ் உயிரினங்கள் அழிந்துவிடும் அபாயம் உள்ளது. எனவே, இதனை தடுக்க உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.

# தமிழக நிவாரணப்பொதிகள் பெருந்தோட்டப் பகுதிகளுக்கு வழங்க துரிதப்படுத்தப்படும்

## ஐ.தே.கவின் இரத்தினபுரி அமைப்பாளர் ஆனந்தகுமார்



தமிழக அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணப் பொருட்களை பகிர்ந்தளிக்கும் செயற்பாடு மலையக பகுதிகளில் தோட்ட நிர்வாகத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதில் சில குறைபாடுகள் உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

தமிழக மக்களின் நிதியுதவியின் கீழ் அண்மையில் இலங்கைக்கு 2 பில்லியன் பெறுமதியான நிவாரணப் பொதிகள் கிடைக்கப்பெற்றன. கட்டம் கட்டமாக இந்த நிவாரணப்பொதிகள் இலங்கைக்கு கிடைக்கப்பெற்று வருகின்றன. இந்நிலையில், இந்த நிவாரணத்தை பகிர்ந்தளிப்பதில் ஏற்பட்ட அரசியல் தலையீடுகள் காரணமாக தற்காலிகமாக நிவாரணத்தை வழங்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. பெருந்தோட்டப் பகுதிகளுக்கு நிவாரணத்தை விரைவாக வழங்கும் தேவையை பிரதமரின் கவனத்துக்கு கொண்டுசென்று அந்தப் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

பெருந்தோட்டப் பகுதிகளில் தோட்ட நிர்வாகத்தினரால் மாத்திரமே நிவாரணப் பொதிகளை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இங்கு எவ்வித அரசியல் தலையீடுகளும் இருக்கக்கூடாது. அவ்வாறான தகவல்கள் இருந்தால் உடனடியாக தெரியப்படுத்தவும்.

இதேவேளை, தோட்டத்தில் பணிப்புரியாதவர்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கப்படவில்லையென குற்றச்சாட்டுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்வாறானவர்கள் உடனடியாக பிரதேச செயலாளரை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

# நுவரெலியாவில் இடம்பெற்ற இலவச மருத்துவமுகாம்





(தலவாக்கலை நிருபர்)

வொயிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா மாவட்ட செயலகம் மற்றும் நுவரெலியா பிரதேச செயலகம் ஆகியன இணைந்து நடத்திய வலது குறைந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான இலவச மருத்துவ முகாம் ஒன்று நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த மருத்துவ முகாமில் 122 வலது குறைந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் வொயிஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி வசந்த புஸ்பகுமார, வொயிஸ் நிறுவனத்தின் நுவரெலியா மாவட்ட பொறுப்பதிகாரி தர்மேந்திரராஜா, நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளர் பிரதீப விஜயசூரிய, அரசசார்பற்ற நிறுவன இணைப்பாளர் நிலங்க மஞ்சுசிறி, சமூக உத்தியோகத்தர் வி.ஏ.பிரியந்த டி சில்வா, ஆர்.டி.குமாரதாஸ, மல்லிகா மற்றும் நுவரெலியா பொது வைத்தியசாலை வைத்தியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கச்சதீவை சூறையாடுவதை எங்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

## அகில இலங்கை தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு



(யாழ். நிருபர்)

கச்சதீவு என்பது எமது நாட்டிலுள்ள வளமிக்கதொரு தீவு. எனவே, எமது நாட்டிலுள்ள ஒரு தீவை கையகப்படுத்துவதை சூறையாடுவதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது - என அகில இலங்கை தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற இலங்கை தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில், இந்தியாவிடம் கையேந்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த சூழ்நிலையில் எமது தொப்புள்கொடி உறவான தமிழ்நாடு அரசு எமக்கு உதவி செய்வதுபோல் உதவிசெய்து உதவிப்பொருட்களை அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டு அந்த சந்தர்ப்பத்தில் கச்சதீவு பிரச்சினையை ஒரு முக்கியமாக எடுத்துக் கொண்டிருப்பது கோபத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

மோடி தமிழகத்திற்கு வந்தபோது தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கச்சதீவு பெறுவதற்கு இதுவே ஒரு தகுந்த தருணம் என வேண்டுகோளொன்றை முன்வைத்திருந்தார். அப்படியானால் எமது நாடு வீழ்ச்சியடைந்து செய்வதறியாமல் தவித்துக்கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் எரிகிற வீட்டில் பிடுங்குவதுபோல் மு.க.ஸ்டாலின் இந்த கச்சதீவை பிடுங்கி எடுக்கலாம் என யோசிக்கிறார். அதனை ஒருபோதும் ஏற்க முடியாது. இது மிகவும் மோசமான முடிவாகும்.

இந்திய - இலங்கை மீனவர்களுக்கிடையே இழுவைமடித் தொழில் தொடர்பில் ஒரு பிரச்சினை இருக்கும் நிலையில் தற்போது தமிழ்நாட்டின் முதலமைச்சர் கச்சதீவை பெற்றுவிட்டால் தங்களுடைய மீனவர்கள் பிரச்சினை தீர்ந்துவிடும். தங்களுடைய மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிப்பாளர்கள் என்று சொன்னால், அதன் கருத்து என்னவென்றால் இன்னும் எமது கடற்பரப்பில் வந்து தமது வாழ்வாதாரத்தை - வளங்களை சூறையாடி எங்கள் தொழில் உபகரணங்களை அறுத்து நாசப்படுத்தி கொண்டுசெல்லலாம் என்ற ஒரு முழுமையான கருத்தை வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

மு.க.ஸ்டாலின் தனது கருத்தினை முழுமையாக பரிசோதனை செய்து இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையிலான இழுவைமடிப் பிரச்சினையை கையிலெடுத்து அதற்கு முதல் தீர்வு காண வேண்டும். கச்சதீவு என்பது ஒரு மீனவர்களுக்கான பிரச்சினையல்ல. இரு நாடுகளுக்குமிடையிலான பிரச்சினை - என்றார்.

# சாவகச்சேரியில் தாய்மாருக்கு இராணுவத்தால் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கிவைப்பு





(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பகுதியில் வறுமை நிலையிலுள்ள 25 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு நேற்று (06) காலை இராணுவத்தின் 7ஆவது விஜயபாகு காலாற்படையணியின் ஏற்பாட்டில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன.

தென்மராட்சி கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக 52ஆவது காலாற்படையணித் தளபதி மேஜர் ஜெனரல் ஹேரத் கலந்துகொண்டு தாய்மாருக்கான உதவிப் பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் 523ஆவது காலாற்படைத் தளபதி சிறிவர்தன, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதோகுமார், கோவிற்குடியிருப்பு கிராம அலுவலர் ஞானசேந்தன், குடும்ப நல உத்தியோகத்தர்கள், இராணுவ அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

தெரிவுசெய்யப்பட்ட தாய்மாருக்கு சத்துணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய 12,500 ரூபா பெறுமதியான பொதிகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் தாய்மாருக்கான இலவச மருத்துவ முகாமும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



தியாகி பொன். சிவகுமாரின் 48ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட செயலகத்தில் அமைப்பாளர் சி.இளங்கோ தலைமையில் நடைபெற்றபோது யாழ். மாநகர முதல்வர், நல்லூர் பிரதேச சபை தவிசளார், யாழ். மாநகர சபை உறுப்பினர், வ. பார்த்திபன் மற்றும் கட்சி உறுப்பினர் பலர் கலந்துகொண்டனர்.

# இன்னும் ஓரிரு மாதங்களில் இருவேளை உணவுக்குக்கூட தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

## மக்களின் வாழ்க்கை பிரச்சினைக்கு தீர்வு வழங்க அரசாங்கம் தலையிட வேண்டும் - திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. கோரிக்கை

உணவுத்தட்டுப்பாடு, அத்தியாவசியப் பொருட்களுக்கான விலை கட்டுப்பாடு உள்ளிட்ட மக்களின் அன்றாட ஜீவனோபாய பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க அரசாங்கம் உடனடியாக தலையிட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தீர்வுகளுக்கான தலையீடுகள் அரசாங்கத்தின் தரப்பில் மேற்கொள்ளப்பட்டதாக இதுவரை தெரியவில்லை. உணவுத்தட்டுப்பாடு குறித்து பிரதமர் குறிப்பிட்டிருந்தார். மூன்று வேளை உண்பதற்கு பதிலாக இரண்டு வேளையே உண்ண வேண்டிய நிலை இன்னும் ஓரிரு மாதங்களில் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (06) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய பிரதமராக ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டு ஒரு மாதமளவில் கடந்துள்ள நிலையில், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என எதிர்பார்த்தனர். அத்தகைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கான குறைந்த பட்ச வேலைத்திட்டங்களோ, கொள்கைகளோ அல்லது மக்கள் சார்ந்த ஏதேனும் தீர்வுகளோ முன்வைக்கப்படவில்லை.

சர்வ வல்லமையும் உடைய ஒருவரே பிரதமராக வருகிறார். அவர் வந்ததும் மக்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளும் தீர்வு சொல்வார் என்றே கூறப்பட்டது. எரிவாயு வரிசைகள் இருந்ததை விட இரண்டு மூன்று மடங்குகளால் அதிகரித்த வண்ணமுள்ளன. ஜூன் 15ஆம் திகதிக்கு பிறகு இந்திய கடன் வசதிகள் ஏற்பாடுகளுக்கமைய கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படும் எரிபொருள் கிடைக்காவிடின் அதற்கு பிறகுள்ள ஏற்பாடுகள் குறித்த திட்டங்கள் தொடர்பில் இதுவரை எந்த முன்னகர்வு யோசனைகளும் முன்வைக்கப்படவில்லை.

இந்தியாவிலிருந்து கிடைக்கப்பெற்ற எரிபொருள் மூலமே ஓரளவுக்கேனும் வீதிகளில் வாகனங்கள் ஓடுகின்றன. வரிசைகள் குறைந்தபாடில்லை. ஜூன் 15க்கு பிறகு எரிபொருட்களுக்கான கொள்வனவு சார்ந்த ஸ்திரமான எந்தவித திட்டமே, கலந்துரையாடலோ அரசாங்க தரப்பிலிருந்து முன்வைத்ததாக தெரியவில்லை.

எரிவாயு வரிசைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. புதிய பிரதமர் நியமிக்கப்பட்டு ஒரு மாதமாகியும் எரிவாயு பிரச்சினையை அரசாங்கத்தால் தீர்க்க முடியவில்லை. எரிபொருள், எரிவாயு, மின்சாரம் மாத்திரமன்றி இன்று அத்தியாவசியப் பொருட்களின் விலை தாங்க முடியாதவாறு அதிகரித்துள்ளன.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் கூட இல்லை. 400 கிராம் பால் மா ஒன்றின் விலை ஆயிரம் ரூபாவையும் தாண்டியுள்ளது. எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 6 ஆயிரத்து 850 ரூபா என லாவ்ஸ் கேஸ் நிறுவனம் கூறுகிறது. வரி விதிப்பால் மீண்டும் இவற்றின் விலைகள் அதிகரிக்கப்படும்.

தீர்வுகளுக்கான தலையீடுகள் அரசாங்கத்தின் தரப்பில் மேற்கொள்ளப்பட்டதாக இதுவரை தெரியவில்லை. உணவுத்தட்டுப்பாடு குறித்து பிரதமர் குறிப்பிட்டிருந்தார். அவருடைய மொழியிலேயே கூறுவதாக இருந்தால் மூன்று வேளை உண்பதற்கு பதிலாக இரண்டு வேளையே உண்ண வேண்டிய நிலை இன்னும் ஓரிரு மாதங்களில் ஏற்படும் என்றார்.

உணவுத்தட்டுப்பாட்டை தவிர்க்கும் முகமாக அரசாங்கத்தின் மாற்று வேலைத்திட்டம் என்ன, இதுவரை எந்த முன்மொழிவுகளையும் அரசாங்கம் முன்வைத்ததாக தெரியவில்லை. மக்களின் நுகர்வு சார்ந்த உணவுத்தேவைகள் தொடர்பிலேனும் புதிய பிரதமர் தீர்வுகளை முன்வைத்ததாக தெரியவில்லை. உள்ள பிரச்சினைகள் தொடர்பாக தொலைக்காட்சிக்கு முன்வந்து துக்கத்தை கூற வேண்டிய தேவை இல்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வே தேவை. அதனையே மக்கள் எதிர்பார்க்கிறேன்.

அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் கூட அரசாங்க தரப்பில் இல்லை. இவற்றை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையிட வேண்டும்.

மக்களின் ஜீவனோபாயத்திற்கு ஏற்ற அத்தியாவசிய உணவுப்பொருட்கள், மருந்துகள் என்பனவற்றை வழங்குவதே ஒரு அரசாங்கத்தின் அடிப்படை பொறுப்பாகும். இந்தப் பொறுப்பிலிருந்து அரசாங்கம் தப்பிவிட முடியாது.

இன்னும் இரண்டு வாரங்களுக்குத் தேவையான அரிசியே கையிருப்பில் உள்ளதாக இலங்கை அரிசி ஆலை உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். இதற்கு அரசாங்கத்தின் புதிய மாற்றீட்டு வேலைத்திட்டங்கள் என்ன, புதிய பிரதமரிடமும் புதிய அரசாங்கத்திடமிருந்தும் மக்கள் தீர்வுகளையும் நிவாரணங்களையுமே எதிர்பார்த்தனர். மக்கள் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். இதை அரசியலைக்கொண்டு பார்க்க வேண்டாம். மக்கள் சார்ந்து செயற்படுங்கள். வேறு காரணங்களை கூற வேண்டாம்.

உணவுத்தட்டுப்பாடு, அத்தியாவசியப் பொருட்களுக்கான விலை கட்டுப்பாடு உள்ளிட்ட மக்களின் அன்றாட ஜீவனோபாய பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க அரசாங்கம் தலையிட வேண்டும்.

21ஆவது திருத்தம் தொடர்பாக இன்று பலரும் பல்வேறு கருத்துகளை முன்வைப்பதை காணக்கிடைக்கிறது. ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்ட திருத்தத்தை அவ்வாறு கொண்டுவருவதாக இருந்தால் எமது பூரண ஆதரவை நாங்கள் வழங்குவோம். 19ஆவது திருத்தத்திலுள்ள ஜனநாயக ஏற்பாடுகளை அவ்வாறே முன்வைத்து அதனுடன் இன்னும் சில ஜனநாயக ஏற்பாடுகளை இணைத்துள்ளோம். ஐக்கிய மக்கள் சக்தி 19 ப்ளஸ் திருத்தத்தையே முன்வைத்துள்ளது. 21ஆவது திருத்தத்தை முன்வைக்கும் உண்மையான தேவை அரசாங்கத்திற்கு இருந்தால் ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்ட திருத்தத்தை கொண்டு வரலாம். சுலபமான ஏற்பாடுகளுடன் திருத்தங்கள் இருந்தால் அதை மேற்கொண்டு காலம் தாழ்த்தாது ஜூன் மூன்றாம் வாரமே நிறைவேற்றலாம்.

21ஆவது திருத்தம் தொடர்பாக அரசாங்கம் ஊடாக நாடகங்களையே நடத்துகிறது. விஜேதாச ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்ட 21ஆவது திருத்தம் வாபஸ் பெறப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அரசாங்கம் புதிதாக ஒரு வரைவைக் கொண்டு வர முயற்சித்தால் குறைந்தது மூன்று மாதங்களேனும் ஆகும். ஆகவே, உண்மையான தேவைப்பாடு அரசாங்கத்திற்கு இருந்தால் ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்த ஏற்பாட்டை கொண்டு வருமாறு கோருகிறோம்.



பெசில் தலைமையில் மொட்டுக்கட்சியின் நாடாளுமன்றக் குழுவினர் பிரதமரை சந்தித்துள்ளனர். 21ஆவது திருத்தத்திலுள்ள இரட்டை பிரஜா உரிமை சரத்து பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாக உள்ளக தகவல்கள் மூலம் அறியக்கிடைக்கிறது. எனவே, இதிலும் வெற்றுத் தோற்றத்தை மக்களுக்கு காட்டாமல் நாட்டு மக்கள், மத குருக்கள், இளைஞர்கள் கோரும் உண்மையான அரசியல் பரிமாண மாற்றத்துக்கு செவிசாயுங்கள் - என்றார்.

# மாத்தளை வீதிகளில் இருமருங்கிலும் ஏற்படுத்தப்படும் இரும்புக்கம்பிகளுக்கிடையில் இடைவெளி வேண்டும்

## வர்த்தகர்கள், குடியிருப்பாளர்கள் கோரிக்கை

(மாத்தளை நிருபர்)

பாதைகளில் செல்லும் பாதசாரிகளின் பாதுகாப்பிற்காக பாதையின் இருமருங்குகளிலும் இரும்புக்கம்பிகளிலான வேலிகளை நிர்மாணித்திருப்பதால் இவ்வீதிகளில் இருக்கும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக தெரிவிக்கின்றனர்.

பாதையோர நடைபாதைகளை பாதுகாப்பதற்கென இரும்புக் கம்பிகளினால் பாதுகாப்பு வேலிகளை நிர்மாணித்திருப்பதால் மேற்படி வர்த்தக நிலையங்களுக்கு வரக்கூடிய பொதுமக்களுக்கு ஏற்ற வசதிகள் முற்றிலும் தடைப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

மாத்தளை தர்மபால வீதி, குமார வீதி, புகையிரத நிலைய வீதி ஆகிய வீதிகளை அபிவிருத்தி செய்து காபட்




இட்டு இரும்புக்கம்பிகளிலான பாதுகாப்பு வேலிகள் போடப்பட்டுள்ளன. மேற்படி வீதிகளில் இருக்கும் வர்த்தக நிலையங்களுக்கு அல்லது குடியிருப்புகளுக்கு செல்ல வேண்டுமென்றால் பாதுகாப்பு கம்பி வேலிகள் போடப்பட்டிருக்கும் ஆரம்பப் பகுதியிலிருந்து இறுதி வரைக்கும் செல்ல வேண்டும். எனவே, பொதுமக்கள் செல்லக்கூடிய வகையில் சிறிய இடைவெளிகளையாவது ஏற்படுத்த வேண்டுமெனவும் நகரவாழ் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இவ்வீதிகளில் வர்த்தக நிலையங்கள் மாத்திரமல்லாமல், கட்டிடத்தின் கீழ் மாடியில் வர்த்தக நிலையங்களும் மேல்மாடியில் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் குடும்ப சகிதமும் வாழ்ந்து வருவதனால் இக்குடியிருப்புகளில் உள்ள நோயாளிகள் அவசர சிகிச்சை தேவைகளுக்காக கொண்டு செல்வது மிகவும் இக்கட்டான செயலாக இருக்கின்றது.

இந்நிலையில், இரும்புக் கம்பிகளிலான பாதுகாப்பு வேலிகளை நிர்மாணிப்பது தொடர்பில் மீள்பரிசீலனை செய்து பொதுமக்கள் வர்த்தக நிலையங்களுக்கு செல்லக்கூடியதாகவும் இவ்வீதிகளில் இருக்கும் குடியிருப்பாளர்கள் போய்வரக் கூடிய உகந்த நிலையிலும் இந்த பாதுகாப்பு கம்பிகள் நிர்மாணிக்கப்படவேண்டுமென பொதுமக்களும் வர்த்தகர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# நாய்களால் கடிக்கப்பட்ட மானுக்கு சிகிச்சை



நாய்களால் கடித்து காயமாக்கப்பட்ட மான் ஒன்று, சிகிச்சைக்காக நல்ல தண்ணி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வட்டவளை- டெம்பள்ஸ்டோ வீடமைப்புத் திட்டத்தைச் சேர்ந்த ஓய்வுப்பெற்ற விமானப்படை அதிகாரியொருவரே காயமடைந்த மானை வனஜீவராசிகள் அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

இஹலவட்டவளை ரயில் நிலையத்துக்கு அருகில், நேற்றுமுன்தினம் குறித்த மான், நாய்களால் கடிக்கப்பட்டு காயங்களுக்குள்ளான நிலையில், அருகிலிருந்த இளைஞர்களும் குறித்த விமானப்படை அதிகாரியும் நாய்களிடமிருந்து மானை காப்பாற்றி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.


திகதி 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4777
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,333,810.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 2 1 3 8 2 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,919,064.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1255
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,410,000.00
வெற்றி இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 2 4 3 3 2 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,541,542.80

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3019
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,209,920.00
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 15 36 71 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,221,429.36

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 807
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,969,680.00
வெற்றி இலக்கினம் N வெற்றி இலக்கங்கள் 63 69 79 82
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 113,118,692.00

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 0086
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,461,340.00
இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 04 11 27 44 விசேட இலக்கினம் மீனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,737,871.60

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1125
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,495,840.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 254,765,726.00
O 22 38 53 72 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk


# புங்குடுதீவு பகுதியில் ஆயுர்வேத வைத்தியசாலை திறந்துவைப்பு



வேலணை புங்குடுதீவு பிரதேசத்தில் ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்று அமைக்கப்பட்டு நேற்று திறந்துவைக்கப்பட்டது.

வேலணை பிரதேச சபையின் தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி தலைமையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தினூடாக சுமார் 16 இலட்சம் நிதி வழங்கப்பட்டிருந்த நிலையில் குறித்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு சம்பிரதாயபூர்வமாக தவிசாளர் நமசிவாயம் கருணாகர குருமூர்த்தியால் மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

இதன்போது தவிசாளர் கருணாகர குருமூர்த்தி கருத்துரைக்கையில்,

தற்போதைய நாட்டு சூழலும் பொருளாதார நெருக்கடியும் மக்களை பெரிதும் பாதித்துள்ளது. இதில் மருத்துவம் சார் தேவைகளும் அதிகரித்துள்ளமையால் மக்கள் பெரும் பாதிப்புகளை நாளாந்தம் எதிர்கொண்டு வரும் நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில், எமது பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியான புங்குடுதீவில் குறித்த வைத்தியசாலையை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவந்த நிலையில் அதற்காக உள்ளூராட்சி மன்றங்களின் பிரதேச அபிவிருத்தி உதவி திட்டத்தினூடாக 16 இலட்சம் ரூபா நிதி இதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் இன்று (நேற்று) இந்த ஆயுர்வேத வைத்தியசாலை இப்பகுதி மக்களின் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், ஆயுர்வேத மருத்துவத்தை அதிகளவில் எதிர்பார்க்கும் முதியோரின் அபிலாஷைகளை நிவர்த்தி செய்யும் வகையிலும் ஏனையவர்களின் நலன்களை முன்னிறுத்தியும் இந்த வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் புங்குடுதீவு பகுதியானது பரந்தளவிலான பகுதியாகவும் பல கிராமங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கும் நிலையில் சில பகுதிகளில் இருந்து மக்கள் தமது மருத்துவ தேவையை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு சென்று பெற்றுக்கொள்ளும் நிலையும் குறைவாகவே காணப்படுகின்றது.

இதனால் மாதாந்தம் 15 நாட்களுக்கு ஒருதடவை நடமாடும் சேவையை பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் மக்கள் நலன்பெறும் வகையில் முன்னெடுக்க வேண்டும் எனவும் தவிசாளரால் வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மண்ணெண்ணெய் கோரி கம்பளை - கண்டி வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்





(கம்பளை யோகா)

கம்பளை நகரில் கடந்த சுமார் ஒரு மாத காலத்துக்கு பின்னர் நேற்று முன்தினம்(05) மண்ணெண்ணெய் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனைப் பெற்றுக்கொள்ள 30 மணித்தியாலயங்களுக்கு மேல் மக்கள் வரிசையில் காத்திருந்தனர்.

இவ்வாறான நிலையில், மண்ணெண்ணெய் விநியோகம் இடையில் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் கம்பளை - கண்டி வீதியை மறித்து நேற்றுமுன்தினம்(05) இரவு 10மணியளவில் வீதிகளில் டயர்களை எரித்து ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு சுமார் ஒரு மாத காலத்திற்கு பின்னர் மண்ணெண்ணெய் கொண்டுவரப்பட்டமையால் சுமார் ஐயாயிரம் பேர்வரை நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

இதன்போது மண்ணெண்ணெய் விநியோகம் இடையில் நிறுத்தப்பட்டமையையடுத்தே, மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் கம்பளை பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இரவு 11.30மணியளவில் மீண்டும் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் தட்டுப்பாட்டால் மக்கள் பெரும் சிரமம்





(கல்குடா நிருபர்)

எரிபொருள் தட்டுப்பாடு நாளாந்தம் இடம்பெற்று வரும் நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் பெற்றோல் மற்றும் டீசலை பெறுவதற்கு பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சிரமப்படுவதை நேற்று அவதானிக்க முடிந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி பிரதேசத்தில் விவசாய செய்கையில் ஈடுபடும் விவசாயிகள், வாகனங்களை கொண்டு அன்றாட தொழிலில் ஈடுபடும் சாரதிகள் தங்களது வாகனத்திற்கான எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு நாளாந்தம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெறுவதற்காக காலை ஆறு மணிமுதல் நீண்ட வரிசையில் பல மணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

தற்போது விவசாய செய்கை இடம்பெற்று வரும் நிலையில், விவசாய செய்கை, தோட்டச் செய்கை மேற்கொள்ள டீசல் தேவைப்படுவதுடன், கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்களுக்கும் டீசல் தேவைப்பாடு அதிகமாக காணப்பட்டு வருகின்றது.

இதனால் எரிபொருளை நம்பி தொழில் செய்பவர்கள் டீசலுக்கு பல மணிநேரம் வெயிலில் இருக்கவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி பிரதேசத்தில் காணப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சிலவற்றில் பெற்றோல் மற்றும் டீசல் காணப்படுகின்றது. சில நிலையங்களில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் இல்லை. மக்கள் இதனால் நாளாந்தம் சிரமப்படுவதுடன், அன்றாட தொழிலாளர்களின் தொழில் முற்றாக பாதிப்படைந்து காணப்படும் நிலைமை உருவாகியுள்ளது.

தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் மக்கள் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு ஒரு நாளை இதற்காக தியாகம் செய்ய வேண்டிய நிலை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்ட நிலையில் எரிபொருள் வழங்கப்பட்டு வருகின்றது.

# அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் செல்ல முயற்சித்த ஒருவர் உயிரிழப்பு

(கனகராசா சரவணன்)

திருகோணமலை, நிலாவெளி கடலிலிருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் கடந்த 23ஆம் திகதி செல்ல முற்பட்டவர்கள் கடற்படையினரை கண்டு தப்பி ஓட முயற்சித்தபோது மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த ஒருவர் நிலத்தில் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் மட்டு. போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்நிலையிலேயே சிகிச்சை பலனின்றி கடந்த 31ஆம் திகதி உயிரிழந்துள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடி, பழத்தோட்டம், முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த 46 வயதுடைய சிவலிங்கம் ஏரம்பமூர்த்தி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

கடந்த மே மாதம் 23ஆம் திகதி திருகோணமலை, நிலாவெளி கடலிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் செல்வதற்காக நிலாவெளி கடற்கரையில் இரவு 67 பேர் காத்திருந்தபோது கடற்படையினருக்கு கிடைத்த தகவலொன்றினையடுத்து அந்த பகுதியை கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து சுற்றிவளைத்தனர்.

இதன்போது அவுஸ்திரேலியாவுக்கு செல்வதற்காக காத்திருந்தவர்கள் கடற்படையினரை கண்டு அங்கிருந்து தப்பி ஓட முற்பட்டபோது குறித்த நபர் நிலத்தில் தவறி வீழ்ந்து தலையில் அடிபட்டு படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடந்த 24 ஆம் திகதி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

அவர் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த 31ஆம் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# "இணையவழி குற்றங்களும் சிறுவர் பாதுகாப்பும்"; மாணவர்கள் மட்டத்தில் விசேட விழிப்புணர்வு கருத்தரங்கு



(மாளிகைகாடு நிருபா்)

இலங்கையில் இணையவழி குற்றங்கள், சிறுவர்கள் மீதான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. இந்த அதிகரிப்பானது சிறுவர்களின் அனைத்துவிதமான செயற்பாடுகளிலும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. எனவே, இவற்றை மாணவர்கள் மட்டத்தில் விழிப்புணர்வூட்டுவதன் மூலம் அவர்களுடைய பாதுகாப்பை அவர்களே உறுதிப்படுத்திக்கொள்ளும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி கருப்பொருளின் மாணவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி, இஸ்லாமிக் ரிலீப் சர்வதேச நிறுவனத்தின் ஏற்பாட்டில் இறக்காமம் மதீனா வித்தியாலத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இறக்காமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், கணக்காளர் திருமதி றிம்ஷியா அர்சாட், மதீனா வித்தியாலய அதிபர் எம்.ஐ.ஜெளபர், இறக்காமம் அஷ்ரப் தேசிய பாடசாலை பிரதி அதிபர் இர்பானா வஹாப் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டதுடன், மேலும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.சபறூல் ஹஸீனா, முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம்.இம்டாட், பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் எஸ்.றிஸ்மியா ஜஹான் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இஸ்லாமிக் ரிலீப் நிறுவனத்தின் உத்தியோகத்தர் கே.ஐஸ்வர்யா, நிகழ்ச்சி அதிகாரி எம்.எஸ்.சுபுஹான் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றதோடு, இஸ்லாமிக் ரிலீப் நிறுவனத்தின் உத்தியோகத்தர் கே.ஐஸ்வர்யாவினால் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் விழிப்புணர்வு அமர்வும் நடத்தப்பட்டது.

இணையவழி குற்றங்களும் சிறுவர் பாதுகாப்பும் எனும் கருப்பொருளின் கீழ் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.எச்.வஹாப், உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப் ஆகியோர் கலந்துகொண்டு விழிப்புணர்வு செயலமர்வை நடத்தினர்.

# சுகாதார அறிவுறுத்தல்களை செவிமடுக்காதவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்

## வைத்திய அதிகாரிகளுக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆலோசனை

(மாளிகைகாடு நிருபா்)

ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள எவருடைய இழப்பும் மிகவும் கவலையானது மட்டுமன்றி, அவர்களுக்கு பாதிப்பானதும் கூட. இறப்பு இறைவனின் நாட்டமென வெறுமனே விட்டுவிட முடியாது. எமது சேவையானது மக்களின் உயிரைக் காப்பாற்ற உயர்ந்த பங்களிப்பை செய்யவேண்டியதாக அமைந்துள்ளது. பொதுமக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டு தமது சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் மிக அசட்டையாக இருந்து வருகிறார்கள்.

நாம் செய்யும் சுகாதார நடவடிக்கைகள் நமது அதிகார எல்லைக்குள் செய்வதுடன், எமது வழிகாட்டல்களையும், அறிவுறுத்தல்களையும் செவிமடுக்காதவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கைகளை எடுப்பதில் தயங்க வேண்டாம் - என சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் அறிவுறுத்தியுள்ளார்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யூ.எல்.எம்.நியாஸ் தலைமையில் இடம்பெற்ற டெங்கு கட்டுப்பாடு தொடர்பிலான கூட்டத்தில் கலந்துகொண்டு சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு கட்டுப்பாட்டு கள உதவியாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், உங்களால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் எச்சரிக்கைகளை நடைமுறைப்படுத்தாதவர்களை எவ்வித தராதரமும் பாராமல் சட்டநடவடிக்கை எடுங்கள். யாராக இருந்தாலும் எவ்வித மன்னிப்பும் இல்லாது அதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்க தயாராக இருக்கிறேன். வீடுகள், அலுவலகங்கள் மட்டுமன்றி கைவிடப்பட்டுள்ள காணிகள், பூட்டப்பட்டுள்ள வீடுகள், அரச நிறுவனங்களுக்கு சொந்தமான காணிகள், பொது நிறுவனங்களுக்கு சொந்தமான காணிகள், மத நிறுவனங்கள் என எல்லா இடங்களிலும் பரிசோதனை செய்து அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.

பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி மாணவர்களை பொது விடயங்களில் ஈடுபட ஊக்கமளித்தல், சிரமதானங்களை செய்ய பழகுவதை உறுதிப்படுத்த வேண்டும். இப்போதுள்ள சந்ததிகள் பொது விடயங்களை பற்றிய எவ்வித தெளிவுமில்லாது பட்டம் முடித்தவர்களாக இருக்கிறார்கள். மாணவர்கள் மத்தியில் போட்டிப்பரீட்சை, புள்ளிகள் பெறுவது பற்றிய சிந்தனையே மேலோங்கி இருக்கிறது. முறையான சமூக கடமைகள் தொடர்பில் அறியாத சமூகமாக வாழும் எமது இளம் சந்ததியினர் சமூக பிரச்சினையை புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றி அதற்கு பின்னூட்டம் அடிப்பதுடன், கடமை முடிந்து விட்டதாக எண்ணுகிறார்கள். இவர்களுக்கு சரியான முறையில் சமூக கடமைகள் பற்றிய அறிவை வழங்கவேண்டும்.

நாட்டிலுள்ள பொருளாதார பிரச்சினையால் எமக்கு கிடைக்கும் மருந்துகளின் அளவில் பாரிய பிரச்சினை இருக்கிறது. எமக்கு கிடைக்கவேண்டிய மருந்துகள் தொடர்பில் பல கேள்விக்குறிகள் இருக்கின்றன.. வருமுன் காப்போம் எனும் நிலையிலேயே நாம் இருக்கிறோம். நாட்டின் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் அரச உயரதிகாரிகளின் அறிவிப்புகளை கேட்கும்போது பயமாக இருக்கிறது. எம் முன்னால் உள்ள சவால்களை வாய்ப்பாக பயன்படுத்தி நாட்டை மீட்டெடுக்கும் பொறுப்பு எம் அனைவர் மீதும் இருக்கிறது. சுகாதார சேவைகள் தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு பாரிய பணி சுமத்தப்பட்டுள்ளதை நன்றாக அறிவேன். பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் உங்களின் பணியில் நான் திருப்தி காண்கிறேன். இனி வரப்போகின்ற காலநிலையில் டெங்கை கட்டுப்படுத்தி எந்த உயிரும் பலியாகிவிடாமல் பாதுகாப்பதை எமது இலக்காகக்கொள்வோம். இதனை இறைபணியாக எண்ணி முன்கொண்டு செல்லுங்கள் - என்றார்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.பி.ஏ.வாஜித், கல்முனை பிராந்திய தொற்றாநோய் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சி.பஸால் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# "கண்ணகை புகழ் பாடுவோம்" பக்திப்பாடல் அடங்கிய இறுவட்டு வெளியீடு

(மட்டக்களப்பு நிருபர்)



மட்டக்களப்பில் புகழ்பெற்ற தாண்டவன்வெளி குளக்கட்டு கண்ணகியம்மன் ஆலய அலங்கார திருச்சடங்கு உற்சவம் அண்மையில் ஆரம்பமாகியது. எதிர்வரும் 14ஆம் திகதி திருக்குளிர்த்தி பாடி அம்மன் உற்சவம் நிறைவுபெறவுள்ளது.

பூம்புகார், ஏரன்ஸ் வீதி வாழ் மக்களால் இரண்டாம் நாள் சடங்கு உற்சவத்தை சிறப்பிக்கும் முகமாக பூசைகள் இடம்பெற்றன. இதன்போது, குழந்தையடி பிள்ளையார் ஆலய கட்டட நிதிக்காக மங்கையக்கரசி குடும்பத்தினரின் அனுசரணையில் கண்ணகை புகழ் பாடுவோம் எனும் பக்திப்பாடல் அடங்கிய இறுவட்டும் வெளியீடு செய்யப்பட்டது.

இந்த இறுவட்டு வெளியீட்டு விழாவில் ஆலய பிரதம குரு சிதம்பரசாந்தரூபக் குருக்கள், ஆலய பிரதம பூசகர் சித்திரவேல் ஐயா மற்றும் ஆலய நிர்வாகத்தினர், மங்கையக்கரசி அம்மையாரின் குடும்ப சந்ததியினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். கண்ணகை அம்பாளின் தீ மிதிப்பு உற்சவம் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தாண்டவன்வெளி வாழ் மக்களின் பத்தாம் நாள் சடங்கு உற்சவ தினத்தன்று இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# செந்தமிழ் சுடர் கலைஞர் விருது பெற்றார் சிரேஷ்ட எழுத்தாளர் றிப்கா அன்ஸார்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியின் பிறந்தநாளை முன்னிட்டு, திண்டுக்கல் பசுமை வாசல் பவுண்டேஷன், தமிழ்நாடு பனை மரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம், சேலம் ஸ்ரீ சரஸ்வதி வித்யாலயா அறக்கட்டளை மற்றும் சேலம் அக்ஷய் டிரஸ்ட் ஆகிய 4 அமைப்புகள் இணைந்து நடத்திய பல்துறை சாதனையாளர்களுக்கான இவ்வாண்டு (2022) முத்தமிழ் கலைஞர் பெருஞ்சுடர் விருதுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலக்கியத்துறையில் ஆற்றிவரும் சிறந்த பங்களிப்புக்காக இலங்கையிலிருந்து கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சாய்ந்தமருது எனும் ஊரைச் சேர்ந்த சிரேஷ்ட எழுத்தாளர் றிப்கா அன்ஸார் செந்தமிழ் சுடர் கலைஞர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். கல்முனை ஸாஹிறா கல்லூரியின் பிரதி அதிபரான இவரை கல்விச் சமூகம் பாராட்டி மகிழ்கிறது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக மகேந்திரன் நியமனம்



ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக தாழங்குடாவைச் சேர்ந்த பிரபல ஆசிரியரும் முன்னாள் அதிபருமான பிரான்சிஸ் மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையின்பேரில் கட்சியின் செயற்குழுவின் அங்கீகாரத்துடன், நேற்று முன்தினம் (05) எதிர்க்கட்சி அலுவலகத்தில் வைத்து இவருக்கான நியமனக்கடிதம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

கடந்த காலங்களில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்காக மட்டக்களப்பில் சிறந்த முறையில் செயற்பட்டமையினால் குறித்த நியமனம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக கட்சியின் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இவர் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகளவிலான வாக்குகளை பெற்றுக்கொடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வீரத்திடல் ஹிதாயா மகா வித்தியாலய அதிபராக முனாஸிர் நியமனம்

(மாளிகைக்காடு நிருபர்)



கல்முனை கல்விவலய நற்பிட்டிமுனை அல்-அக்ஸா மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவுக்கு அதிபராக கடமையாற்றிய நற்பிட்டிமுனையைச் சேர்ந்த திருமதி முனாஸிர் சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட வீரத்திடல் கமு/சது/அல்- ஹிதாயா மகா வித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நற்பிட்டிமுனையில் முதல் பெண் அதிபராக நியமனம் பெற்ற திருமதி முனாஸிரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நற்பிட்டிமுனை அல்- கரீம் பவுண்டேசன் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அல்- கரீம் பவுண்டேசன் தலைவர் சீ.எம்.ஹலீம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பவுண்டேசன் குழுமத்தின் உறுப்பினர்கள் பங்குபற்றி பாராட்டி கௌரவித்தனர். புதிய அதிபராக நியமனம் பெற்ற திருமதி முனாஸிர் கமு/சது/அல்- ஹிதாயா மகா வித்தியாலயத்தில் நேற்று (06) உத்தியோகபூர்வமாக கடமையேற்றார்.





நற்பிட்டிமுனை பிரதேச மக்கள் மண்ணெண்ணெய் பெற நேற்று (06) பெற்றோல் நிலையத்தில் நீண்ட வரிசையில் காத்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

(படங்கள் - நற்பிட்டிமுனை நிருபர்)

# உயர்தர மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகளை ஒத்திவைக்க தீர்மானம்

(சாய்ந்தமருது நிருபர்)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரத்துக்கான மேலதிக வகுப்புகளை கல்முனையிலுள்ள தனியார் கல்வி நிலையங்களில் உடனடியாக ஆரம்பிக்க தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் எதிர்வரும் 18ஆம் திகதிக்குப் பின்னரே அவற்றை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.



கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பிரிவுகளில் கல்வி கற்கவுள்ள புதிய மாணவர்களுக்கான வகுப்புகள் கடந்த சனிக்கிழமை (04) ஆரம்பமாகுமென மேலதிக வகுப்புகளை நடத்தும் நிறுவனங்களினால் விளம்பரம் செய்யப்பட்டிருந்த நிலையில், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுற்ற கையோடு இவ்வகுப்புகள் நடத்தப்படுவதற்கு பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் தரப்பிலிருந்து அதிருப்தி வெளியிடப்பட்டதன்பேரில், மாணவர்களின் ஓய்வைக் கருத்திற்கொண்டு, மேலதிக வகுப்பு நடத்துனர்கள் மாநகர சபைக்கு அவசரமாக அழைக்கப்பட்டு, அவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி, கலந்துரையாடியதையடுத்து இரு வாரங்கள் தாமதித்து, வகுப்புகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை, கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்கும் அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் மாணவர்களின் நலன் கருதி மாநகர சபையினால் ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் விதிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டுமெனவும் இதன்போது நடத்துனர்களிடம் வலியுறுத்தியுள்ளோம்.

குறிப்பாக, டியூட்டரிகளின் சுற்றுச்சூழல் சுத்தம், காற்றோட்ட வசதிகள், மாணவர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு போன்றவை உறுதிப் படுத்தப்படுவதுடன் மலசலகூட வசதிகளும் கட்டாயம் செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் கட்டணங்கள் நியாயமான முறையில் அறவிடப்பட்ட வேண்டும் எனவும் அறிவுறுத்தியிருக்கிறோம்.

இவ்விடயங்களில் அலட்சியப்போக்குடன் செயற்படும் டியூட்டரிகளின் அனுமதிப்பத்திரம் இரத்துசெய்யப்படும் என்பதுடன், அவற்றை இழுத்து மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நடத்துனர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர் - என கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் சாய்ந்தமருதில் பரிசோதனை நடவடிக்கை தீவிரம்

## மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென சுகாதார வைத்திய அதிகாரிகள் எச்சரிக்கை

(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸின் வழிகாட்டலிலும், கல்முனை பிராந்திய தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சி.எம். பஸாலின் அறிவுறுத்தலிலும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் யூ.எல்.எம்.நியாஸ் தலைமையில் நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.





அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நுளம்புகள் ஆய்வின்போது நுளம்புகளின் செறிவு அதிகமாகக் காணப்படுவதால் தங்களது வீட்டைச் சுற்றிலும் சூழவுள்ள இடங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ளுமாறு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

வீடு வீடாகச்சென்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தலைமையிலான குழுவினர் பரிசோதனையில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். இதன்போது நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான இடங்கள் கண்டுபிடிக்கப்படுமாயின், சம்பந்தப்பட்டவர்களுக்கெதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென சுகாதாரத்துறை அறிவித்துள்ளதுடன், தங்களது வீட்டையும் அதனைச் சூழவுள்ள இடங்களையும் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு மக்களை பணித்துள்ளனர்.

மேலும், எதிர்வரும் மழைக்காலங்களில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கும் என்பதுடன், நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த தங்கள் வீடுகள், வளவுகளை சுத்தம் செய்வதோடு தங்கள் வீடுகளில் காணப்படும் நுளம்புகள் பெருவதற்கு ஏதுவான பொருட்களை அழிக்குமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தலைமையிலான பணியாளர் குழு மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

## போடியார் புலம்பல்!



**போரில இறந்த இராணுவ வீரர்களுக்காக கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன் வருந்துகிறதா இப்ப சொல்லுறாரு எலுவா.**

**ஒரு வேள அவரிட சம்பந்தி ஆக்களிட ஆரோ இராணுவத்தில இருந்து செத்த சங்கதிய இப்பதான் தெரிஞ்சதோ சரிடாம்பி. நீங்க வருந்துங்க அது உங்கட இஷ்டம். ஆனா முள்ளிவாய்க்காலில செத்த தமிழ் சனம் இனப்படுகொலயாலதான் எண்டத மட்டும் ஏன்டா நீங்க மறக்கயல்.. அதையும் ஒள்ளுப்பம் சொல்லன் பார்ப்பம்.**

# பிராந்திய வைத்தியசாலைகளில் பயன்தரும் மரங்கள் - உணவுப் பயிர்களை நடுவதற்கு விசேட வேலைத்திட்டம்

(பொத்துவில் நிருபர்)

நாட்டின் பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு, கல்முனை பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகள், சுகாதார நிறுவனங்களில் பயன்தரும் மரங்கள் மற்றும் உணவுப் பயிர்களை நடுவதற்கான விசேட வேலைத்திட்டமொன்றினை முன்னெடுத்து வருவதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு அண்மையில் ஒருதொகுதி மருத்துவ உபகரணங்களை கையளித்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது. உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அந்தவகையில் சுகாதாரத்துறையினரும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தங்களாலான பங்களிப்புகளைச் செய்யவேண்டும்.

கல்முனை பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலங்கள் உள்ளிட்ட சுகாதார நிறுவனங்களில் போதியளவு நிலங்கள் காணப்படுகின்றன. குறித்த நிலங்களில் பயன்தரும் மரங்கள் மற்றும் உணவுப் பயிர்களை நடுவதற்குரிய விசேட வேலைத்திட்டமொன்றினை முன்னெடுத்து வருகின்றோம். அவற்றை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு சகலரின் ஒத்துழைப்புகளும் அவசியமாகும். நாங்கள் சுகாதாரத்துறையினர் என்றும் அதிகாரிகள் என்றும் கூறிக்கொண்டு சும்மா இருந்துவிடாதீர்கள்.



ஒரு சிறியதொரு பொருளையேனும் கொள்வனவு செய்யமுடியாத இக்காலகட்டத்தில் என்னுடைய தனிப்பட்ட செல்வாக்கினைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவ உபகரணங்களில் சுமார் 4 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்களை பொத்துவில் வைத்தியசாலைக்கு கையளித்துள்ளோம். குறித்த பொருட்களின் மூலம் மக்கள் உச்ச பயனடையும் வகையில் பணியாற்றுங்கள். இல்லையெனில் அவற்றை தேவையான இடங்களுக்கு வழங்கி ஏனையவர்களுக்கும் உதவுங்கள்.

மருந்துப் பொருட்களுக்கு அதிக விலை மற்றும் தட்டுப்பாடுகள் நிலவிவரும் இக்காலகட்டத்தில், அரசாங்க வைத்தியசாலைகளில் நோயாளர்களின் வருகையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. எனவே, மருந்துப் பொருட்களை சிக்கனமாகப் பாவியுங்கள். ஒரு பிளாஸ்டர் துண்டையேனும் வீண்விரயம் செய்துவிடாதீர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மண்டூர் குருமண்வெளி வாவிக்கு பாலம் அமைப்பது எப்போது?

## படுவான் எழுவான்கரை மக்கள் விசனம்







(மண்டூர் நிருபர்)

மட்டக்களப்பு வாவியில் படுவான்கரையையும் எழுவான்கரையையும் இணைக்கும் 5 ஓடத்துறைகள் இருந்தன. சோ.உ.எதிர்மனசிங்கம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் வலையறவு துறைக்கும் பாலம் அமைக்கப்பட்டது. மூன்றாவதாக மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் மண்முனைதுறைக்கும் பாலம் அமைக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்திலுள்ள துறைகளில் மிகவும் ஆழமானதும் நீளமானதுமான மண்டூர், குருமண்வெளி துறை ஆயிரம் மீற்றர் நீளம் கொண்டதாகும். இன்றும் பல நூற்றாண்டுகளாக இந்த மண்டூர், குருமண்வெளி துறையினூடாக எழுவான்கரையிலிருந்தும் படுவான்கரையிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் ஓடங்கள் மற்றும் வள்ளங்களைப் பயன்படுத்தி பயணங்களை மேற்கொள்வது வழக்கம்.

பயணங்களை மேற்கொள்ளும்போது வாவியில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அதிகமான சுமையினால் வள்ளங்கள் நடுவாவியில் மூழ்கடிக்கப்படுவதுமுண்டு. கடந்த 1993ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தைக் கொண்டாடும் நோக்கில் தந்தை ஒருவர் மட்டக்களப்பிலுள்ள பாடசாலையில் கல்வி கற்றுவந்த தனது மகனை இந்த வாவியினூடாக வள்ளத்தில் தனது வீட்டுக்கு அழைத்து வரும்போது திடீரென்று ஏற்பட்ட அதிகமான காற்றினால் அந்த வள்ளம் நீரில் மூழ்கியது. அந்த துயரச்சம்பவத்தில் தந்தையும் மகனும் அந்த வாவியிலேயே நீரில் மூழ்கி மரணிக்க நேர்ந்தது.

பின்னர் இந்த ஓடத்துறையினூடாக பயணிக்கும் மக்களின் நன்மை கருதி இயந்திரப் படகுசேவை ஆரம்பிக்கப்பட்டது. இன்றுவரை அதே இயந்திரப் படகுசேவை செயற்பாட்டில் இருந்துவருகின்றது. ஆனால், இந்த இயந்திரப் படகுசேவை நிரந்தரமான தீர்வில்லை என்பதே உண்மை. காரணம், பருவ மழைக்காலம் வந்தால் வெல்லாவெளி ஊடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுவிடும். அதேபோன்று கிட்டங்கி வீதி வழியான போக்குவரத்தும் தடைப்பட்டுவிடும். மக்களின் போக்குவரத்திற்கு ஒரேவழி பாதை இந்த வாவியினூடான பயணமே. இப்படியே இன்றுவரை செல்கின்றது.

பிரதேசத்திலுள்ள மக்களின் கனவை நனவாக்கும் நோக்கில் கடந்த 2017ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய நல்லிணக்க அமைச்சின் மூலம் 140 கோடி ரூபா செலவில் மண்டூர், குருமண்வெளி குறுக்கான பாலத்திற்கான அடிக்கல் நடப்படும் என அறிவிக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 14 ஆம் திகதி குறித்த வாவிக்கு ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் பட்டிருப்பு தொகுதியின் முன்னாள் அமைப்பாளர் சோ.கணேசமூர்த்தியின் வழிகாட்டலுடன் பெருந்தொகையான பொதுமக்களின் ஆதரவுடன் அடிக்கல் நாட்டப்பட்து. இன்று நான்கு வருடங்கள் கடந்தும் எவ்விதமான வேலைத்திட்டங்களும் நடைபெறவில்லை. இந்நிலையில், இந்த வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கு என்னவானது என்பதே பிரதேசவாசிகளின் வினாவாகும்.

பல கஷ்டங்களுக்கு மத்தியில் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், அரச உத்தியோகத்தர்கள் என இந்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தங்களின் பயணங்களை இந்த இயந்திரப்படகினூடாக மேற்கொண்டு வருகின்றனர். அதேவேளை, இந்த இயந்திரப்படகினூடாக பயணிக்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மண்டூர், குருமண்வெளி ஆகிய இரு இடங்களில் இயந்திரப்படகு தரித்துநிற்கும் தரிப்பிடத்தை விட்டு குன்றும் குழியுமாக சீரற்ற கற்கள் நிறைந்த தரிப்பிடத்தில் இந்த இயந்திரப்படகு தரித்து நிற்பதால் இந்த வாகனங்களை ஏற்றி இறக்குவதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, வீதி அபிவிருத்தி அதிகாரிகள், பிரதேச வாசிகள் சிரமமில்லாமல் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதேச மக்கள் கோருகின்றனர்.

# செவிப்புலனற்றோருக்கான ஒருநாள் தலைமைத்துவப் பயிற்சி செயலமர்வு!



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு செவிப்புலன் வலுவற்றோர் நிறுவனமும், சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து நடத்திய தலைமைத்துவப் பயிற்சி செயலமர்வு அண்மையில் மட்டக்களப்பு மாநகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

செவிப்புலன் வலுவற்றோர் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் பூ.கஜாதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவனும், சிறப்பு அதிதியாக மாநகர சபை பிரதி முதல்வர் தி.சத்தியசீலனும் கலந்துகொண்டனர். இச்செயலமர்வின் வளவாளராகக் கலந்துகொண்ட தமிழ் சைகை மொழியின் பணிப்பாளர் எஸ்.செல்வகுமாரால் வாழ்க்கைத்திறன் தலைமைத்துவப் பயிற்சியானது மிக எளிய முறையில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கலந்துகொண்ட பயிற்சியாளர்களுக்கு செயலமர்வின் நிறைவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இறைச்சி - மீன் விற்பனைப் பிரிவுகள் மக்களின் பாவனைக்காக கையளிப்பு



(கல்லடி நிருபர்)

உலக வங்கியின் உள்ளூர் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் பங்களிப்புடன் புனரமைப்புச் செய்யப்பட்ட மட்டக்களப்பு மாநகர சபையின் பொதுச் சந்தைக்கான இறைச்சிக் கடைகள் மற்றும் மீன் விற்பனைக் கடைகள் பொதுமக்களின் பாவனைக்காக அண்மையில் கையளிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகர சபை பிரதி முதல்வர் தி.சத்தியசீலன், மாநகர சபை ஆணையாளர் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாநகர சபை சந்தைப் பகுதியில் குறித்த விற்பனை நிலையங்கள் நீண்டகாலமாக சந்தைத் தொகுதியின் மேல்தளத்தில் இயங்கி வந்ததனால் மேல் தளத்திற்குச் சென்று மீன் மற்றும் இறைச்சியை கொள்வனவு செய்வதில் நுகர்வோர் எதிர்கொண்ட சிக்கல் நிலையைக் கருத்திற்கொண்டு, இவ்விதம் மேற்குறிப்பிட்ட விற்பனைப் பிரிவுகள் மாற்றப்பட்டுள்ளன.




# இளைஞர்கள் மத்தியில் சடுதியாக அதிகரிக்கும் தொற்றா நோய்கள்!

## இதுதொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழகம் கவனம் செலுத்துமென பேராசிரியர் கனகசிங்கம் தெரிவிப்பு

(கல்லடி நிருபர்)

கிழக்கு பிரதேசங்களிலுள்ள இளம் வயதினர் மத்தியில் புற்றுநோய் மற்றும் சர்க்கரை வியாதி போன்ற தொற்றா நோய்கள் அதிகரித்து வருவதாக அண்மைய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே, வைத்திய நிபுணர்களும், பல்கலைக்கழக வைத்திய பீட கல்வியியலாளர்களும் கூடுதலான கவனம் செலுத்தவேண்டும் - என கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பிரிவுகளில் ஒன்றான சமூகம் மற்றும் தொழிற்றுறைகளைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கும் நிலையம் துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தலைமையில் கிழக்குப் பல்கலைக்கழகச் சுகாதார பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பல்கலைக்கழகம் ஒரு சமூகநிறுவனம் என்பதால் ,சமூகம் தொடர்பான சமகால விடயங்களை ஆய்விற்குட்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியதோடு, கிழக்கு பிரதேச மக்களின் நல்வாழ்வை மேன்மையடையச் செய்வதில் சுகாதாரத் துறையினரின் முன்னெடுப்புகளுடன் பல்கலைக்கழகம் எப்போதும் இணைந்து செயற்பட உள்ளது -என்றார்.



இந்நிகழ்வில் மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் , மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சுகுணன் உள்ளிட்ட பிரேதச சுகாதார வைத்திய அதிகாரிகள் பல்கலைக்கழக சுகாதார பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி உட்பட பேரவை உறுப்பினர்களும் பங்குபற்றினர்.

இந்நிலையத்தின் பணிப்பாளர் வைத்தியர் க.அருளானந்தம் நிகழ்வை வழிப்படுத்தி நிலையத்தின் செயற்பாடுகள் பற்றி விளக்கமளித்தார்.

புற்றுநோயின் கையேறு நிலை பற்றிய ஓர் அவசர நடவடிக்கை சமூகங்களுக்கிடையில் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதும் இக்காலகட்டத்திற்கேற்ப போசாக்கான உணவுப் பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்த வழிவகை செய்யவேண்டும் என்பதும் கருத்துகளாக அமைந்தன.

தொடர்ந்து பிரதேச வைத்திய அதிகாரிகள் கருத்து தெரிவிக்கையில், சமூகம்சார் நோய்த் தடுப்பு மற்றும் குணப்படுத்தல் பற்றிய தெளிவொன்றை அனைவரும் பெற்றிருக்க வேண்டும் என்பதையும் நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறியும் ஒரு விழிப்புணர்வு இந்நிலையத்தின் மூலம் செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.



# வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்பாள் தேவஸ்தான திருத்தல வரலாறும் மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவும்

## 10ஆம் திகதி - மஹா கும்பாபிஷேகம், 12ஆம் திகதி - தேர் வெளிவீதியுலா

*மகேஸ்வரி ராமதாஸ்- வத்துகாமம்*

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற பழமொழிக்கமைய முன்னோர் வழி நின்று இன்னும் நம் இந்து மதத்தினர் தாம் வாழும் ஊரெல்லாம் கோயில் கட்டி வாழ்வாங்கு வாழ்ந்த பெருமைக்குரியவர்கள் நம்மவர்கள் என்றால் மிகையாகாது.

ஊரெல்லாம் கோயில் எழுப்பி எமது ஆன்மீக வாழ்விற்கு வழிகாட்டிச் சிறக்க வாழ்ந்த எம்முன்னோர்கள் எமக்கென விட்டுச் சென்ற பழம்பெரும் திருத்தலங்களை அருமையாய் பாதுகாப்பது எம் தலையாய கடமை அன்றோ. அந்த வழியில் குன்றா அருள்மழை பொழியும் அம்பாள் திருத்தலமாக மத்திய மாகாணத்தில் வத்துகாமம் நகரில் கோயில்கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்பாள் தேவஸ்தானம் விளங்குகிறது.

இத்தேவஸ்தானம், யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வத்துகாமத்தில் உயர்பதவி வகித்தவருமான வியாழரென எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட ஸ்ரீகனகசபை வைத்தியலிங்கத்தால் தமது காலஞ்சென்ற புதல்வி மூத்தம்மாள் எனும் முத்தாச்சியின் நினைவாகவும் அம்பாளின் தரிசன அருள் பெறவும் கட்டப்பட்டது.

கட்டுகலை பிள்ளையார் தேவஸ்தானம் நிறைவுற்றபோது அங்கிருந்த சிற்பாசிரியர்களை அழைப்பித்து சுடலைமுத்து ஆச்சாரி, கதிர்வேல் ஆச்சாரி முதலிய விஸ்வகர்த்தாக்களை கொண்டு எழுந்தருளி விக்கிரகங்களையும் செய்து பிரதிஷ்டை உபயங்களையும் செய்ததுடன் பல நன்கொடைகளையும் செய்து ஊக்குவித்தனர்.

வத்துகாமம் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம் 1887ஆம் ஆண்டு வத்துகாமம் பகுதியில் நில சொந்தக்காரரான எட்வெட் துரையிடம் (ஆங்கிலேயர்) அமுணுவத்தை என்ற இடத்தில் கனகசபை வைத்தியலிங்கம் பிள்ளை, ச.ந.சீனி ஆச்சாரியார், எஸ். முனியாண்டி தேவர், வி. சின்னையா, பி.கதிர்வேல் ஆச்சாரி ஓவசியார் ஆகியோர் இணைந்து புளியமரத்தடியில் இரும்புத் தூண்களை கொண்டு கோயிலை அமைத்தனர்.

1905ஆம் ஆண்டு மண்டலாபிஷேகம் நடைபெற்றது. அன்று சுவாமி உள்வீதி உலாவந்தார். 1910ஆம் ஆண்டு செப்டெம்பர் 16ஆம் திகதி அமுணுவத்தை, கொரக்காதண்ட காணியையும் கோயிலுடன் இணைத்தனர். 1913ஆம் ஆண்டு செல்லம்பிள்ளை, நாகலிங்கம், வைத்தியலிங்கம் ஆகியோர் நிர்வகித்து வந்தனர். 1926ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் கனகசபை வைத்தியலிங்கம் இறைபதம் அடைந்தார். அவரின் மகன் செல்லம்பிள்ளை 1929.05.19 நிர்வாகத்தை ஏற்றார். அவர் தலைமையில் 1927.06.09ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அது சில காலத்தில் இயங்காமல் போனதால் மீண்டும் 2013.03.13ஆம் திகதி அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் சரஸ்வதி அறநெறி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. சைவ அபிமானிகள், சங்கத் தலைவர் சிவராஜ் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் எஸ்.ராமதாஸ் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டு ஆரம்ப ஆசிரியராக சுப்பிரமணிய சிவநாதன், உதவி கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம் வத்தேகம வலயம்) அவரின் தலைமையின் கீழ் இந்து இளைஞர் மன்றம், மகளிர் மன்றம் ஆகியன ஆரம்பிக்கப்பட்டு அதன் பணிகள் செவ்வனே இடம்பெற்று வருகின்றன.

நூறு வருடங்கள் பழைமை வாய்ந்த முத்துமாரியம்மன் ஆலயம் 1982.02.07 பாலஸ்தானம் செய்யப்பட்டது. அதன்பின் 1984.08.28 மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள் மண்டலாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. 1999ஆம் ஆண்டு சைவ அபிமானிகள் சங்கம் பொதுக்கூட்டத்தின்போது கோ.சிவராஜ் ஜே.பி. பொறுப்பேற்ற பின், 1999.05.14ஆம் திகதி புதிதாக அமைக்கப்பெற்ற மணிகோபுர கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆலயத்தினை விமானங்கள், சிம்மம், கொடிஸ்தம்பம், வசந்த மண்டபம், வைரவர், சண்டேஸ்வரர், இலிங்கேஸ்வரர், தீர்த்தக்கிணறு அமைக்கப்பெற்று மூன்றாவது கும்பாபிஷேகம் 2000.09.01 நடைபெற்றது.

2003.12.12 சித்திர தேர்த்திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது. 2004.05.31 முதலாவது சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. 2001 வைகாசி விசாகம் பஞ்சரத தேர்பவனியின்போது முத்துமாரியம்மன் தேர் எல்கடுவ வீதி வரஸ்கத்தென்ன வரை செல்ல ராமதாஸின் வேண்டுகோளுக்கிணங்க, தேர் வரஸ்கத்தென்ன வரை சென்று மக்களின் பூஜைகளை ஏற்றுக்கொண்டது.

2019.05.18 நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாதத் தாக்குதலால் பஞ்சரத பவனி இரத்துச் செய்யப்பட்டு அம்பாள் தேர் மட்டும் வீதி உலா வர மட்டுமே அனுமதிக்கப்பட்டது. 2020.05.21 கொரோனா தொற்று நோய் காரணமாக பஞ்சரதபவனி இரத்துச் செய்யப்பட்டு அம்பாள் தேர்பவனி மட்டும் வீதி உலா வர சுகாதாரத் திணைக்களத்தினால் மட்டுப்படுத்தப்பட்ட 15 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாண்டுக்கான 4ஆவது மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு 09ஆம் திகதி எண்ணெய்க்காப்பு நடைபெறும். அதனைத்தொடர்ந்து 11ஆம் திகதி மாலை மாவிளக்கு பூஜை நடைபெறும்.



12ஆம் திகதி வசந்த மண்டப பூஜை நடைபெற்று அலங்கரிக்கப்பட்ட ரதங்களில் பக்தர்கள் புடைசூழ தேர் வெளிவீதியுலா வரும்.

பின்னர் 13ஆம் திகதி காலை தீர்த்த ரத பவனி திருவிழா நடைபெறும்.

பூஜைகள் அனைத்தும் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சபரிமழை குருமுதல்வர் மஹாராஜ ராஜகுரு ஸ்ரீ ஜயப்பதாச சாம்பசிவ சிவாச்சார்யார் தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலைக்குள் அத்துமீறி நுழைந்த இருவர் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினுள் அத்துமீறிநுழைந்தவெளியாட்கள்இருவர்அங்கிருந்த பல்கலைக்கழக மாணவிகள் மீது தாக்குதல் நடத்திய சமயம் மாணவர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் தியாகி பொன். சிவகுமாரன் நினைவு தினம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

அதற்காக மாணவர்கள் அங்கு வருகை தந்திருந்தனர். அந்த நிகழ்வு முடிவுற்ற பின்னர் பல்கலைக்கழக வளாகத்துக்குள் நின்ற மாணவிகள் மீது வெளியிலிருந்து வந்தஇருவர்திடீரெனதாக்குதல் நடத்தினர். பின்னர் அங்கிருந்த ஆண் மாணவர் மீதும் அவர்கள் தாக்குதல் நடத்த முற்பட்டபோது ஏனைய மாணவர்கள் ஒன்றுசேர்ந்து அந்த இருவரையும் மடக்கினர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குத்தகவல்வழங்கப்பட்டதையடுத்து,அங்கு வந்த பொலிஸார் தாக்குதல் நடத்திய இருவரையும் கைதுசெய்தனர்.

# கொடிகாமத்தில் வீடு உடைத்து திருடிய சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பகுதியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை வேளையில் வீடுடைத்து பணம் திருடிய சந்தேகத்தின்பேரில் கொடிகாமம் பொலிஸார் நேற்று முன்தினம் நபரொருவரை கைது செய்துள்ளனர்.

தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளார். கைதான நபரிடமிருந்து பணப்பை ஒன்றும் கைப்பற்றப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை கொடிகாமம் நகரை அண்மித்த 4 வீடுகளில் கொள்ளையர்கள் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட நிலையில் ஒரு வீட்டில் மாத்திரம் 45 ஆயிரம் ரூபாபணத்தைகொள்ளையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கைதான நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சிறப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுங்கள்

## தமிழக முதலமைச்சருக்கு கஜேந்திரன் எம்.பி. வேண்டுகோள்

(யாழ். நிருபர்)

தமிழகத்தின் சிறப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களின் கோரிக்கையை நிறைவேற்ற தமிழக முதலமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் - என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு இது தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



தமிழகத்தின் சிறப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளஈழத்தமிழர்கள்தொடர்ச்சியாகஉண்ணாவிரதம் இருந்துவரும் நிலையில் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளது. அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் இதுவரையில் நிறைவேற்றப்படாதமை உண்மையில் ஏமாற்றத்தையும் மனவேதனையையும் தருகின்றது.

இதனை கருத்திற்கொண்டு அவர்களை விடுவிப்பதற்கு தமிழக முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருப்பவர்களின் விருப்பத்துக்கேற்ப தாயகம் திரும்புவதற்கோ அல்லது தொடர்ந்தும் தமிழகத்தில் இருப்பதற்கோ உரிய ஏற்பாடுகளை தமிழக முதலமைச்சர் செய்ய வேண்டும்.

இலங்கையில்இடம்பெற்றஇனப்படுகொலை, யுத்தம் காரணமாகவேஇங்கிருந்து பலரும் வெளிநாடுகளுக்குச் சென்ற நிலையில், அவ்வாறு வருபவர்களுக்கு அடைக்கலம் தருவதாக கூறிக்கொண்டே ஈழத்தமிழர்களை சிறப்பு முகாம்களில் அடைத்து வைத்திருப்பது என்பது உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.

ஆகவே, அவர்களை விடுவிப்பதற்கு தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்விடயத்தில் தமிழக முதலமைச்சர் உடனடியாக தலையிட்டு அவர்களின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றார்.

# அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு யாழில் அங்குரார்ப்பணம்



(யாழ். நிருபர்)

அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொது நூலகக்கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை10மணிக்குஇடம்பெற்றநிகழ்வின்போதே இந்தக் கூட்டமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

'சமாதானம், சகவாழ்வுமற்றும் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான பயணம்' எனும் தொனிப்பொருளில் அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு, தெற்கு, கிழக்கு, மலையகம் என இலங்கையின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கவுள்ளனர்.

# சீவலி மத்திய கல்லூரி திரைப்படக்குழு மாணவர்களுக்கு கெமரா அன்பளிப்பு



(இரத்தினபுரி நிருபர்)

இரத்தினபுரி சீவலிமத்திய கல்லூரியின்திரைப்படக் குழு மாணவர்களுக்கு சப்ரகமுவ மாகாண ஆளுநர்டிக்கிரிகொப்பேகடுவதனது சொந்தநிதியிலிருந்து படப்பிடிப்புக்கான கெமரா ஒன்றை அன்பளிப்பு செய்துள்ளார்.

மேற்படி கெமராவை அன்பளிப்பு செய்யும் நிகழ்வு அண்மையில் சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதியில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இரத்தினபுரி சீவலி மத்திய கல்லூரியின் மாணவர்கள் அண்மையில் சப்ரகமுவ மாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தின்அருகில்படப்பிடிப்பு பயிற்சியில் ஈடுபட்டிருந்ததை மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ அவதானித்து அம் மாணவர்களை தனது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அழைத்து அவர்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

அதற்கமைய, மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ அம்மாணவர்களை கடந்த வியாழக்கிழமை மாகாண சபை அலுவலகத்துக்கு அழைத்து தனது சொந்த நிதியிலிருந்து கெமரா ஒன்றை அன்பளிப்பு செய்துள்ளார்.

# வவுனியாவில் அட்சயபாத்ரா உதவி; இந்திய துணைத்தூதுவரால் வழங்கிவைப்பு









(வவுனியா நிருபர்)

இந்திய மக்களால் வழங்கப்பட்ட நிவாரண உதவித்திட்டம் நேற்று 'அட்சயபாத்ரா உதவிகள்' எனும் தொனிப்பொருளில் வவுனியா பிரதேச செயலகத்தில் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சரத் சந்திர தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட 30 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

இதன்போது யாழ். மாவட்ட இந்திய துணைத்தூதரகத்தின் துணைத்துதுவர் ராகேஷ் நட்ராஸ் ஜெயபாஸ்கரன், பிரதேச செயலாளர்உட்படஇந்தியதுணைத்தூதரகஅதிகாரிகளும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

உலக செய்திகள்

### நபிகள் நாயகம் குறித்த பா.ஜ.க .நிர்வாகிகள் சர்ச்சை கருத்து

# இந்தியாவுக்கு எதிராக கொதித்தெழும் அரபு நாடுகள்

- வளைகுடாவில் இந்தியப் பொருட்கள் புறக்கணிப்பு
- இந்திய தூதரக அதிகாரிகளுக்கு அழைப்பாணை

## ''இந்திய அரசு பொதுமன்னிப்பு கேட்கவேண்டும்''– வளைகுடா வலியுறுத்து

## ''மத சுதந்திரத்தை மீறும் செயல்'' – ரஷ்ய ஜனாதிபதி புட்டின் கண்டனம்





நபிகள் நாயகம் குறித்த பா.ஜ.க. நிர்வாகிகளின் சர்ச்சை கருத்தால் இஸ்லாமிய நாடுகளில் இந்தியாவுக்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. சவூதி, கட்டார், குவைத், ஈரான், பாகிஸ்தான், பஹ்ரைன் அரசுகள் இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி விளக்கம் கேட்டுள்ளனர்.

இந்நிலையில், கட்டார் வெளியுறவுத்துறை அமைச்சு அந்நாட்டிலுள்ள இந்தியத் தூதரான தீபக் மிட்டலை அழைத்துப் பேசி அறிக்கையொன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையில்,

''நபிகள் நாயகத்திற்கு எதிராக இந்தியாவின் ஆளுங்கட்சியைச் சேர்ந்த இருவர் சர்ச்சைக்குரிய வகையில் பேசியது கண்டனத்திற்குரியது. இது தொடர்பாக இந்திய அரசின் கண்டனத்தையும் பொது மன்னிப்பையும் எதிர்பார்க்கிறோம். இப்படி இஸ்லாமியத்துக்கு எதிரான பேச்சுகளை எந்தவித தண்டனையும் இல்லாமல் அப்படியே விடுவது மனித உரிமைகளுக்கு ஆபத்தாக அமைவதோடு, பாரபட்சத்திற்கும் ஓரவஞ்சனைக்கும் வழிவகுக்கும், அது வெறுப்பையும் வன்முறையையும் தூண்டும்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கு பதிலளித்த இந்தியத் தூதர் தீபக் மிட்டல்,

''இந்த கருத்துகளுக்கும் இந்திய அரசுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. எங்களின் கலாசாரத்தின்படியும், வேற்றுமையில் ஒற்றுமை என்ற கொள்கையின்படியும் இந்திய அரசு அனைத்து மதங்களையும் சமமாக மதிக்கிறது'' - எனக் கூறியதோடு, ஏற்கனவே தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டதாக விளக்கமளித்திருக்கிறார்.

**பா.ஜ.க. நிர்வாகிககள் பதவி நீக்கம்**

பா.ஜ.கவின் தேசிய செய்தித் தொடர்பாளர்களில் ஒருவரான நுபுர் சர்மா, சமீபத்தில் ஞானவாபி பள்ளிவாசலில் சிவலிங்கம் கிடைத்தது குறித்து தொலைக்காட்சி விவாதமொன்றில் பங்கேற்றார். அப்போது, முகமது நபிகள் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகளை தெரிவித்திருந்தார்.

இதை கண்டித்து கான்பூரில் நடந்த கடையடைப்பின்போது, இரு தரப்பினரிடையே மோதல் வெடித்தது. இந்நிலையில், நுபுர் சர்மாவின் கருத்துக்கு நாடு முழுவதும் கடும் கண்டனம் எழுந்துள்ளது. இதன் காரணமாக நேற்றுமுன்தினம் அவரை கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கி பா.ஜ.க. தலைமை நடவடிக்கை எடுத்தது. அதேபோல், டில்லி பா.ஜ.க. செய்தித் தொடர்பாளரான நவீன் ஜிண்டால் சமூக வலைத்தளத்தில் பதிவிட்ட கருத்து கலவரத்தை தூண்டும் வகையில் இருப்பதாகக் கூறி, அவரையும் கட்சியிலிருந்து பா.ஜ.க. நீக்கியுள்ளது.

**இந்தியப் பொருட்கள் புறக்கணிப்பு**

இந்நிலையில், நபிகள் நாயகம் குறித்த பா.ஜ.க. நிர்வாகிகளின் விமர்சனத்தை கண்டித்த வளைகுடா நாடுகள், இந்தியப் பொருட்களை புறக்கணிக்க வேண்டும் என்று போர்க்குரல் உயர்த்தியுள்ளன. சவூதி அரேபியா, பஹ்ரைன், குவைத் போன்ற நாடுகளில் கடைகளிலிருந்து இந்தியப் பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. சில கடைகளில் இந்தியப் பொருட்களை தடை செய்யப்பட்ட பொருட்கள் என்று ஸ்டிக்கர் ஒட்டி மூடிவைத்துள்ளன. கட்டார், குவைத், ஈரான் ஆகிய நாடுகளின் இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் வாழும் 200 கோடிக்கும் அதிகமான இஸ்லாமியர்களை புண்படுத்தும் வகையில் பா.ஜ.க. நிர்வாகிகள் தெரிவித்த கருத்துக்காக இந்திய அரசு பொதுமன்னிப்பு கேட்கவேண்டும் என்று குவைத் அரசு வலியுறுத்தியுள்ளது. நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தி பேசுவது மத சுதந்திரத்தை மீறும் செயல் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும் கண்டித்துள்ளார்.

**வளைகுடா ஒத்துழைப்பு சபை கண்டனம்**

நபிகள் நாயகம் குறித்த நுபுர் சர்மாவின் அவதூறு பேச்சுக்கு வளைகுடா ஒத்துழைப்பு சபையின் பொதுச் செயலாளர் நயீஃப் பலாஹ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தெரிவிக்கையில், பா.ஜ.க. செய்தித் தொடர்பாளரின் இந்த கருத்து தவறானது. அதை நிராகரிக்க வேண்டும். நபிகள் நாயகம் பற்றி அவதூறாக பேசியதை கண்டிக்கிறேன். குறிப்பிட்ட மதத்தினரின் தீர்க்கதரிசிகள், மத சின்னங்கள், வழிபாட்டுத் தலங்கள் குறிவைக்கப்படுகின்றன. மத நம்பிக்கைகளை இழிவுபடுத்தி வெறுப்பைத் தூண்டுவதை தடுத்துநிறுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேபோல், நபிகள் நாயகம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசிய பா.ஜ.க. செய்தித் தொடர்பாளருக்கு தலிபான் அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. இஸ்லாம் மதத்தையும், முஸ்லிம்கள் உணர்வையும் புண்படுத்துவதை இந்திய அரசு அனுமதிக்கக் கூடாது என்று ஆப்கான் தலிபான் அரசு தெரிவித்துள்ளது.

**பா.ஜ.க. அறிக்கை**

''ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்தியாவில் பல்வேறு மதங்கள் தோன்றி செழிப்பாக வளர்ந்துள்ளன. பா.ஜ.க. அனைத்து மதத்தையும் மதிக்கிறது. எந்தவொரு மதத்தையும்,




அதன் கடவுளரையும் அவமதிப்பதை பா.ஜ.க. வன்மையாகக் கண்டிக்கிறது. பிற மதத்தை நிந்தனை செய்யும் எந்தவொரு சித்தாந்தத்தையும் பா.ஜ.க. ஊக்குவிக்காது. அத்தகைய நோக்குடன் செயற்படும் நபர்களையும் ஊக்குவிக்காது.

இந்திய அரசியல் சாசனம் ஒவ்வொரு குடிமகனுக்கும் தான் விரும்பும் மதத்தை பின்பற்றும் உரிமையை வழங்கியுள்ளது. இந்தியா 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் வேளையில் நாட்டை அனைவரும் சமமாக வாழும், அனைவரும் சமமான மாண்பைப் பெறும் வளமிக்க நாடாக மாற்ற நாங்கள் முயற்சிக்கிறோம். இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு முக்கியம். அப்போதுதான் அனைவருமே வளத்தின், வளர்ச்சியின் கனியை சுவைக்க முடியும்'' என்று விளக்கியுள்ளது.

**கலவரமும் - கைதும்**

பா.ஜ.க. தேசிய செய்தித் தொடர்பாளர் நுபுர் சர்மா அண்மையில் அளித்த பேட்டியில், முகமது நபிக்கு எதிராக கருத்துகளை கூறியதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதைக் கண்டித்து உத்தரப்பிரதேசம் கான்பூரில் கடந்த வெள்ளிக்கிழமை முஸ்லிம் அமைப்புகள் சார்பில் கடையடைப்பு நடத்தப்பட்டது. இதன்படி கான்பூரின் பரேட் சந்தையில் பாதியளவு கடைகள் அடைக்கப்பட்டிருந்தன.

இந்தச் சூழலில் வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்து வெளியே வந்த முஸ்லிம்கள், பரேட் சந்தையில் திறந்திருந்த கடைகளை மூடும்படி வற்புறுத்தினர். இதற்கு கடைக்காரர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் சுமார் 100 பேர் கும்பல் கற்களை வீசி தாக்குதல் நடத்தத் தொடங்கியது. எதிர்த்தரப்பும் பதில் தாக்குதலில் ஈடுபட்டதால் கலவரம் வெடித்தது.

தகவலறிந்து கான்பூர் பொலிஸ் ஆணையர் விஜய் சிங் மீனா தலைமையிலான பொலிஸார் சம்பவ இடத்தில் குவிந்தனர். மாநில ஆயுதப்படையினரும் வரவழைக்கப்பட்டனர். கூட்டத்தைக் கலைக்க முதலில் தடியடி நடத்தப்பட்டது. பின்னர் கண்ணீர் புகைக்குண்டுகள் வீசப்பட்டன. நீண்ட போராட்டத்துக்குப் பிறகு கலவரம் கட்டுப்படுத்தப்பட்டது. கலவரம் மற்றும் பொலிஸ் தடியடியில் ஏராளமானோர் காயமடைந்தனர்.

கான்பூரில் 2ஆவது நாளாக நேற்றுமுன்தினமும் பதற்றமான சூழல் நீடித்தது. கலவரம் தொடர்பாக பொலிஸ் தரப்பில் 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கலவரத்தில் பாதிக்கப்பட்டோர் அளித்த முறைப்பாட்டின் பேரில் மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன்படி அடையாளம் தெரிந்த 40 பேர் மீதும், அடையாளம் தெரியாத 1,000 பேர் மீதும் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதுவரை 36 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கலவரத்துக்கு மூளையாக செயற்பட்டதாகக் கூறப்படும் ஹயாத் ஜாபர் ஹஸ்மி கைதுசெய்யப்பட்டு, அவரிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக நூபூர் சர்மாவும், நவீன் ஜிண்டாலும் செய்தித் தொடர்பாளர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சர்ச்சை குறித்து நவீன்குமார் ஜிண்டால் தெரிவிக்கையில்,

எனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், இந்து தெய்வங்களை அவமதிப்பவர்களிடம் ஒரு கேள்வியையே எழுப்பியிருந்தேன். மாறாக, எந்தவொரு சமூகத்தின் மத உணர்வுகளைப் புண்படுத்தும் நோக்கத்தோடு அதனைப் பதிவிடவில்லை - என்றார்.

**கருத்தை திரும்பப் பெற்றார் நூபுர்**

கட்சியின் இடைநீக்க நடவடிக்கையைத் தொடர்ந்து, தொலைக்காட்சி விவாதத்தில் முகமது நபி குறித்து தெரிவித்த சர்ச்சை கருத்தை திரும்பப் பெறுவதாக நூபுர் சர்மா அறிவித்தார்.

அதுதொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட அறிக்கையில்,

நான் கடந்த சில தினங்களாக தொலைக்காட்சி விவாதத்தில் பங்கேற்றபோது, நமது மகாதேவன் (சிவன்) தொடர்ச்சியாக அவமதிப்பு செய்யப்பட்டார். குறிப்பாக, சிவலிங்கம் ஒரு நீரூற்று என ஏளனம் செய்யப்பட்டது.

மேலும், டில்லியில் வீதியோரப் பலகைகள் மற்றும் தூண்களுடன் சிவலிங்கம் ஒப்பீடு செய்யப்பட்டு ஏளனம் செய்யப்பட்டது. அதற்கு பதிலடி கொடுக்கும் விதத்திலேயே எனது கருத்தை நான் தெரிவித்தேன். எனது கருத்து சிலரின் மத உணர்வுகளைப் புண்படுத்தியிருந்தால் அல்லது யாருக்காவது அசௌகரியத்தை ஏற்படுத்தியிருக்குமானால், எனது கருத்தை எந்தவித நிபந்தனைகளுமின்றி திரும்பப் பெறுகிறேன் - என்று குறிப்பிட்டுள்ளார்.

சர்ச்சை கருத்தைத் தொடர்ந்து அவர் மீது மத உணர்வுகளை புண்படுத்தியதாக மும்பை, ஐதராபாத், புனே உள்ளிட்ட இடங்களில் வழக்குகள் பதிவு'செய்யப்பட்டுள்ளன. அவருக்கு எதிராக முஸ்லிம் அமைப்புகள் போராட்டங்களிலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்லாமிய நாடுகள் கூட்டமைப்பின் விமர்சனம் தேவையற்றது; உள்நோக்கம் கொண்டது

### இந்திய மத்திய அரசு தெரிவிப்பு

''முகமது நபி குறித்து சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்த விவகாரத்தில் இஸ்லாமிய நாடுகள் கூட்டமைப்பின் விமர்சனம் தேவையற்றது, உள்நோக்கம் கொண்டது'' என்று இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய கருத்துகளை தெரிவித்தவர்கள் மீது ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், இஸ்லாமிய நாடுகள் கூட்டமைப்பின் விமர்சனங்கள் நிராகரிக்கப்படுவதாகவும், அனைத்து மதங்களையும் இந்தியா மதிப்பதாகவும் இந்திய மத்திய வெளியுறவு அமைச்சு விளக்கமளித்துள்ளது.

---

# மனிதகுலத்தை அழிவுக்கு அழைத்துச் செல்லாதீர்கள்!

### உக்ரைன் – ரஷ்ய போரை முடிவுக்குக் கொண்டுவர போப் பிரான்சிஸ் வலியுறுத்து



உக்ரைன் - ரஷ்ய போரை முடிவுக்குக் கொண்டுவர உண்மையான பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என போப் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் இன்று 103 நாளாகவும் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. ரஷ்யப் படைகள் தொடர்ச்சியாக உக்ரைன் நகரங்களை கைப்பற்றுவதை நோக்கமாகக்கொண்டு செயற்பட்டு வருகின்றன. உக்ரைன் தலைநகர் கீவ் இன்னும் ரஷ்யாவுக்கு எட்டாக்கனியாக இருப்பதுதான் போர் 100 நாட்களை தாண்டியும் தொடர்வதற்கு முக்கிய காரணமாகும். இந்தப் போரால் உக்ரைனிலிருந்து 69 இலட்சம் பேர் வெளியேறி அண்டைநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். ரஷ்யப் படையானது பாடசாலைகள், வைத்தியசாலைகள் மீது குண்டுவீசுகிறது. போரை நிறுத்துவதற்கு சர்வதேச அளவில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து பேச்சுவார்த்தைகளும் தோல்வியில் முடிந்துள்ளன.

குறிப்பாக, வத்திக்கான் தேவாலயத்தில் போப் பிரான்சிஸ், போரை முடிவுக்குக் கொண்டுவர உலக நாடுகளின் தலைவர்கள் தீவிரமாக முயற்சிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகிறார். இந்நிலையில், செயின்ட் பீட்டர் சதுக்கத்தில் நேற்று உரையாற்றிய அவர், உக்ரைனுக்கு செல்ல விரும்புவதாகவும், சரியான நேரத்திற்காக காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். மனிதகுலத்தை அழிவிற்கு அழைத்துச் செல்லாதீர்கள் என கேட்டுக்கொண்ட போப் பிரான்சிஸ், ''போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான உண்மையான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும். போருக்கான தீர்வை எட்டுவதற்கு தலைவர்கள் முன்வர வேண்டும்'' எனவும் அழைப்பு விடுத்துள்ளார்.

---

# நைஜீரிய தேவாலயத்தில் மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு

### குழந்தைகள் உட்பட 50 பேர் உயிரிழப்பு; பலர் படுகாயம்



நைஜீரியாவின் தேவாலயம் ஒன்றில் மர்ம நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூடு மற்றும் வெடிகுண்டுத் தாக்குதலில் குழந்தைகள் உட்பட 50 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

தென்மேற்கு நைஜீரியாவின் ஓவோ நகரத்திலுள்ள செயின்ட் ஃபிரான்சிஸ் கத்தோலிக்க தேவாலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் குழந்தைகள், பெண்கள் உட்பட பொதுமக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டிருந்தனர். அப்போது திடீரென தேவாலயத்திற்குள் புகுந்த மர்ம நபர்கள் மக்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியதுடன், வெடி பொருட்களையும் வெடிக்கச் செய்துவிட்டு தப்பியோடியுள்ளனர்.



இச்சம்பவத்தில் குழந்தைகள் உட்பட 50 பேர் உயிரிழந்துள்ளனர். 20இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், தாக்குதல் நடத்திய மர்ம நபர்கள் தேவாலயத்தின் பாதிரியாரை கடத்திச் சென்றுள்ளதால் தாக்குதலுக்கு மத ரீதியிலான காரணம் உள்ளதா என ஓண்டோ மாகாண பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஓண்டோ மாகாணத்தில் சமீபகாலமாக விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருகிறது. இதன் காரணமாக துப்பாக்கிச்சூடு நடந்ததா என்றும் அதிகாரிகள் விசாரணை செய்து வருகின்றனர்.

---

### யமுனோத்ரிக்கு யாத்திரை

# உத்தரகண்ட் பஸ் விபத்து: 22 பக்தர்கள் பலி; 4 பேர் காயம்

### ராம்நாத் கோவிந்த் – மோடி இரங்கல்



உத்தரகண்டில் பஸ்ஸொன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 26 பக்தர்கள் உயிரிழந்துள்ளதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

கொரோனா பாதிப்பின் பின்னர் உத்தரகண்டிலுள்ள புனித தலங்களான கேதார்நாத், பத்ரிநாத், கங்கோத்ரி, யமுனோத்ரி, சார்தாம் யாத்திரை உள்ளிட்ட பகுதிகளுக்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டிருப்பதால் பக்தர்கள் வருகை அதிகரித்துள்ளது. கரடு முரடான பாதை என்பதால் இவ்வழியான போக்குவரத்தின்போது அதிக விபத்துகள் இடம்பெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், மத்திய பிரதேச மாநிலம், பன்னா மாவட்டத்திலிருந்து 28 பக்தர்களுடன் உத்தரகண்ட் மாநிலம் யமுனோத்ரியை நோக்கி பஸ்ஸொன்று நேற்று புறப்பட்டுள்ளது. குறித்த பஸ் உத்தர்காஷி மாவட்டத்திலுள்ள டாம்டா அருகேயுள்ள மலைப்பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த மீட்புக்குழுவினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 26 பேர் உரிழந்துள்ளதுடன், 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

**ராம்நாத் கோவிந்த் – மோடி இரங்கல்**


விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.



# பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஆஸி. தொடர் இன்று ஆரம்பம்



## 2.5 மில்லியன் டொலர் வருமானத்தை ஈட்டவுள்ள இலங்கை கிரிக்கெட் சபை








**(ஏ. அகீல் சிஹாப்)**

சுற்றுலா அவுஸ்திரேலிய அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையிலான இருதரப்பு கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி இன்று இரவு 7.00 மணிக்கு கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர், 5 போட்டிகள்கொண்ட ஒருநாள் மற்றும் 2 போட்டிகள்கொண்ட டெஸ்ட் ஆகிய தொடர்களில் விளையாடுகிறது. இலங்கையில் நிலவும் பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆஸி. அணியின் குறித்த சுற்றுப்பயணம் அமைந்திருக்கிறது. இந்தத் தொடர் நடைபெறுமா, இல்லையா என்ற பல சந்தேகங்களுக்கு மத்தியில் இன்று இருபதுக்கு 20 சர்வதேச தொடர் ஆரம்பமாகிறது.

**2.5 மில்லியன் டொலர் வருமானம்**

இலங்கையில் தற்போது நிலவும் நிதிப் பிரச்சினை காரணமாக இந்தத் தொடரை நடத்துவது இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தின் வெளிநாட்டு மதிப்பு சுமார் 2 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இந்தத் தொடருக்கான ஊடக அனுசரணை மாத்திரம் சுமார் 3 இலட்சம் அமெரிக்க டொலர் மதிப்புடையதாக இருக்கும்.

அதேபோல், விளம்பரம் மற்றும் பிற வருவாய் வழிகள் மூலம் மொத்தம் 3 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை கிரிக்கெட் சபையால் திரட்ட முடியும். மறுபுறத்தில் போட்டியின் உற்பத்திச் செலவும் அதிகரிக்கும். தொடரின் முடிவில், இலங்கை கிரிக்கெட்டுக்கு 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை மிச்சப்படுத்த முடியும்.

**உன்னிப்பாக அவதானிக்கும் ஆசிய கிரிக்கெட் பேரவை**

வருமானம் ஒரு பக்கம் இருந்தாலும், இந்தாண்டுக்கான ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரை நடத்தும் உரிமம் இலங்கைக்கு கிடைத்துள்ள நிலையில், குறித்த ஆஸி. அணியின் சுற்றுப்பயணத்தை வெற்றிகரமாக நடத்தி முடிக்கும்பட்சத்தில் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரை, தொடர்ந்து இலங்கையில் நடத்த ஆசிய கிரிக்கெட் பேரவை அனுமதி வழங்கும். எனவே, அதற்கு முன்னோட்டமாகவே ஆஸி. அணியின் சுற்றுப்பயணம் அமைந்திருக்கிறது.

அந்தவகையில் இன்று ஆரம்பமாகின்ற 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் தொடர்பில் அவதானம் செலுத்தலாம்.

**நேருக்கு நேர்**

இதுவரையில் இரு அணிகளுக்கும் இடையில் மொத்தமாக 22 போட்டிகள் நடைபெற்றுள்ளன. கடந்த 2007ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் முதல் முறையாக இருபதுக்கு 20 சர்வதேச போட்டி நடைபெற்றது. அந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலகு வெற்றிபெற்றது.

அன்றிலிருந்து இன்றுவரையில் நடைபெற்ற 22 போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி 13 போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கும் அதேவேளை, இலங்கை அணி 9 போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கிறது. இலங்கை அணி இறுதியாக கடந்த பெப்ரவரியில் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தது. இதில் அவுஸ்திரேலிய அணி 4-1 என்ற அடிப்படையில் தொடரை வென்றது.

**ஆதிக்கம் செலுத்தும் இலங்கை**

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் இதுவரையில் 7 இருதரப்பு இருபதுக்கு 20 சர்வதேச தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் இலங்கை அணி 4 தொடர்களை கைப்பற்றியிருக்கும் அதேவேளை, அவுஸ்திரேலிய அணி 3 தொடர்களை கைப்பற்றியிருக்கிறது. எனினும், இறுதியாக நடைபெற்ற தொடரை ஆஸி. அணி சொந்த மண்ணில் கைப்பற்றியிருந்தது.

**சிறந்த ஃபார்மில் இலங்கை வீரர்கள்**

அண்மையில் நடைபெற்றுமுடிந்த இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் பங்கேற்ற அனைத்து வீரர்களும் சிறப்பாக பிரகாசித்திருந்த நிலையில், தொடரில் பங்கேற்ற அனைத்து வீரர்களும் ஆஸி. அணியுடனான தொடரில் இடம்பெற்றுள்ளனர். எனவே, ஆஸி. அணியுடனான தொடர் மிகவும் விறுவிறுப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

**புதிய பயிற்றுவிப்பாளருடன் இலங்கை அணி**

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக செயற்பட்ட மிக்கி ஆர்த்தரின் பதவி விலகலைத் தொடர்ந்து இலங்கை அணி இறுதியாக ஆஸி. மண்ணில் ஆஸி. அணியுடன் இடைக்கால பயிற்றுவிப்பாளருடன் களமிறங்கியது. புதிய தலைமை பயிற்றுவிப்பாளராக இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் கிறிஸ் சில்வர்வூட் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை அணி முதல் முறையாக புதிய பயிற்றுவிப்பாளருடன் களமிறங்குகிறது.

**ரசிகர்களின் அமோக ஆதரவு**

இலங்கையில் நிலவும் விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் குறித்த ஆஸி. தொடரில் ரசிகர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுமென எதிர்பார்த்த நிலையில், கொழும்பில் நடைபெறவுள்ள முதல் இரு இருபதுக்கு 20 போட்டிகளுக்குமான நுழைவுச்சீட்டு ஒரேநாளில் விற்பனையானது. இதன்மூலம் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கிரிக்கெட் ரசிகர்களின் ஆதரவு அமோகமாக அமைந்திருக்கிறது.

## 64 ஆண்டுகளின் பின்னர் உலகக்கிண்ணத்தில் வேல்ஸ்



2022 பீபா உலகக்கிண்ண உதைபந்து தொடரில் விளையாட 64 ஆண்டுகளின் பின்னர் ஐரோப்பா கண்டத்திலிருந்து வேல்ஸ் அணி தகுதிபெற்றது.

32 அணிகள் பங்குபற்றும் 22ஆவது பீபா உலகக்கிண்ண உதைபந்து தொடர் எதிர்வரும் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கு 29 அணிகள் தகுதி பெற்றிருந்தன. இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற உலகக்கிண்ண இறுதி தகுதிச்சுற்று போட்டியில் உக்ரைன் அணி, வேல்ஸ் அணியுடன் மோதியது. இதில் வெற்றிபெறும் அணி உலகக்கிண்ணப் போட்டிக்கு நேரடியாகத் தகுதிபெறும் என்ற நிலை இருந்தது.

கார்டிப் நகரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் வேல்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் உக்ரைனை வீழ்த்தியது. இந்த வெற்றி மூலம் அந்த அணி உலகக்கிண்ணத் தொடருக்கு முன்னேறியது. மார்ச் மாதம் நடைபெறவேண்டிய போட்டி தற்போது நடந்துள்ளது. உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததால் இந்தப் போட்டி ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

ஆட்டத்தின் 34ஆவது நிமிடத்தில் வேல்ஸ் அணியின் தலைவர் காரெத் பாலே வெற்றிக்கான கோலை அடித்தார். இதற்கு முன் 1958ஆம் ஆண்டு முதல் முறையாக வேல்ஸ் அணி முன்னேறியிருந்தது. வேல்ஸ் அணி 'பி' பிரிவில் இருக்கிறது. இங்கிலாந்து, அமெரிக்கா, ஈரான் ஆகிய நாடுகளும் அந்தப் பிரிவில் உள்ளன. பீபா உலகக்கிண்ணத் தொடருக்கு இன்னும் 2 நாடுகள் தகுதிபெற வேண்டியுள்ளது.

## டிக்கெட் வருமானம் அனைத்தும் மக்களுக்கே



சுற்றுலா இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்பயணத்தின் டிக்கெட் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் அனைத்தையும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு வழங்க இலங்கை கிரிக்கெட் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

டிக்கட் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதும் பொதுமக்களுக்கு நன்கொடையாக வழங்கப்படும் என இலங்கை கிரிக்கெட்டின் செயலாளர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியா சுற்றுப்பயணத்தின் மூலம் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை எதிர்பார்க்கிறது.

அவுஸ்திரேலியா சுற்றுப்பயணத்திற்குப் பிறகு பாகிஸ்தான் விரைவில் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்ளவுள்ளதுடன், ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரும் கொழும்பில் நடைபெறும். எனவே, இந்தப் போட்டித் தொடரை ஆதரிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம் என இலங்கை கிரிக்கெட்டின் செயலாளர் மொஹான் டி சில்வா மேலும் தெரிவித்தார்.

## பிரெஞ்ச் ஓபன் சம்பியனாகி பல சாதனைகளுக்கு சொந்தக்காரரான நடால்



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் நோர்வேயின் கேஸ்பர் ரூடை 6-3 6-3, 6-0 என்ற நேர் செட்களில் வீழ்த்தி 14ஆவது முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார் ரபேல் நடால். மேலும் இது அவர் வெல்லும் 22ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும்.

டென்னிஸ் உலகில் ரோஜர் பெடரர், ரபேல் நடால், நோவக் ஜோகோவிச் உள்ளிட்டோர் பிக் த்ரீ என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் மூவரும் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இதில் நடால் 22 முறையும், பெடரர், ஜோகோவிச் ஆகியோர் தலா 20 முறையும் கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டங்களை கைப்பற்றியுள்ளனர். பிரெஞ்ச் ஓபனில் மட்டுமே 14 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார் நடால்.

தான் வென்ற கிராண்ட்ஸ்லாம் பட்டங்களில் ஏற்கனவே 13 பட்டங்களை பிரெஞ்ச் ஓபனில்தான் கைப்பற்றினார் நடால். தற்போது 2022இலும் வென்றதன் மூலம் 14ஆவது முறையாக சம்பியனாகி சாதனை புரிந்துள்ளார்.

பெடரர், ஜோகோவிச்சுடன் நடாலும் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றிருந்த நிலையில், கடந்த ஜனவரி மாதம் ஆஸி. ஓபனில் பட்டம் வென்றதின் மூலம் 21ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றி சாதனை புரிந்தார். தற்போது வென்ற இந்த சம்பியன் பட்டம் நடாலுக்கு 22ஆவது பட்டமாகும்.

மேலும் ஒரே ஆண்டில் ஆஸி. ஓபன் மற்றும் பிரெஞ்சு ஓபன் பட்டங்களை நடால் வெல்வது இதுவே முதன்முறையாகும். மேலும் பிரெஞ்ச் ஓபனில் சம்பியன் பட்டம் வென்ற அதிக வயதான வீரர் என்ற பெருமையையும் பெற்றார் நடால்.

## அம்பாறை மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான தடகள சம்பியன்ஷிப் போட்டிகள்





**(நிந்தவூர் நிருபர்)**

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அமெச்சூர் தடகள சம்பியன்ஷிப் போட்டியும், அம்பாறை மாவட்ட விளையாட்டு விழாவும் அண்மையில் அம்பாறை இந்திரசரபுர கல்லூரி மைதானத்தில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட செயலகம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விளையாட்டுப் போட்டியில் மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.

முழுமையான குருட்டுத்தன்மை, செவித்திறன் குறைபாடு, பேச்சு குறைபாடு, அறிவுசார் குறைபாடு (மனதின் மெதுவான வளர்ச்சி), மேல் கைகளின் இயல்பான செயல்பாடு, முழங்காலுக்கு மேல் ஒரு கால் இழப்பு, முழங்காலுக்கு கீழே ஒரு கால் இழப்பு மற்றும் உயரம் செ.மீ. 145 வயதுக்குட்பட்டோர் பிரிவில் ஜம்பிங், தட்டு எறிதல், ஈட்டி எறிதல், குண்டு போடுதல், 100 மீற்றர் ஓட்டம், 200 மீற்றர் ஓட்டம் என பல போட்டிகள் இடம்பெற்றன. வெற்றிபெற்ற விளையாட்டு வீரர்களுக்கு நிகழ்வின் இறுதியில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7